Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து

SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.

ராம்கோ ராம்கோ

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து

(சீ-884)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 03 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 14 (17.05.2003) சனிக்கிழமை இதழ்: 225

# நோர்வே அமைச்சர் மீண்டும் இன்று புலிகளை சந்திக்கிறார்

## ரணிலுடனான பேச்சுகளையடுத்து முடிவு



(கொழும்பு)

**நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன், இன்று காலை மீண்டும் கிளிநொச்சி வருகிறார். பிரதமர் ரணிலுடனான முக்கிய சந்திப்பையடுத்தே கிளிநொச்சி வரும் இவர், விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடாத்தவுள்ளார்.**

நேற்றுமுன்தினம், தலைவர் பிரபாகரனுடன் பேச்சு நடத்திய நோர்வேக் குழுவினர், அன்று மாலையே புலிகளுடனான தமது பேச்சுக்கள் குறித்த விபரங்களை, பிரதமர் ரணிலுடன் தொடர்புகொண்டு கலந்துரையாடினர்.

பிரதமர் ரணிலுடனான சந்திப்பினைத் தொடர்ந்து - நோர்வே பிரதியமைச்சர் ஹெல்கிசன், நேற்று அமைச்சர்கள் மிலிந்து மொறகொட, ஜி.எல். பீரிஸ் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். நேற்றுப் பகல் நீண்டநேரமாக இப்பேச்சுக்கள் நடைபெற்றன. இப்பேச்சுக்களின் இறுதியிலேயே, மீண்டும விடுதலைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தளபதிகள் கருணா, பதுமன் நேற்று கிழக்கிற்கு புறப்பட்டனர்!

(மட்டக்களப்பு)

வன்னிக்கு வருகைதந்திருந்த கேணல் கருணா, கேணல் பதுமன் ஆகியோர், நேற்று கிழக்கு மாகாணம் புறப்பட்டுச் சென்றனர். இவர்கள் நேற்று மதியம் உலங்குவானூர்தி மூலம் மட்டக்களக்களப்பு - இலுப்பையடிச்சேனையைச் சென்றடைந்தனர்.

வன்னியிலிருந்து புறப்பட்ட இவர்களை, அரசியற்துறை பொறுப்பாளர், தளபதிகள் வழியனுப்பி வைத்தனர்.

நோர்வே உயர்மட்டக் குழுவினர், தலைவர் பிரபாகரனைச் சந்திக்க வருவதையொட்டியே - கேணல் கருணா, கேணல் பதுமன் ஆகியோர் வன்னிவந்திருந்தனர்.

இவர்கள், தலைவர் பிரபாகரன் - நோர்வேக் குழுவினர் சந்திப்பிலும் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரோக்கியோ நிதியுதவி மாநாடு குறித்த

## தமது முடிவை மீளாய்வு செய்ய புலிகளிடம் ஜப்பான் கோரிக்கை

ஜப்பானில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என்ற முடிவினை, விடுதலைப் புலிகள் மீளாய்வு செய்யவேண்டும் என, ஜப்பான் அவசர வேண்டுகோளை விடுத்துள்ளது.

ஜப்பான் மாநாட்டைத் தவறவிடாது விடுதலைப் புலிகள் கலந்துகொள்வர் என் ஜப்பான் அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும், அந்நாட்டுத் தூதரகத்தை மேற்கோள் காட்டி 'ரொய்ட்டர்' செய்தி வெளியிடடுள்ளது.

ஜப்பான் மாநாடு - இலங்கையின சமாதான நடவடிக்கைகளை வலுப்படுத்தும் எனவும், சமாதானப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுவரும் சம

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மாளிகை பாதுகாப்பு: வாபஸ்பெறுவதற்கு அரசு திட்டம்!

(கொழும்பு)

ஜனாதிபதி மாளிகையைச் சுற்றியுள்ள பாதுகாப்பைக் குறைக்க, அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

உயர்மட்ட மாநாடு ஒன்றில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இதன்படி - ஜனாதிபதி மாவத்த, விஜேராம மாவத்தை ஆகியவற்றிலுள்ள வீதிச் சோதனை நிலையங்களையும், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் முன்பாகவுள்ள வீதித் தடைகளையும் அகற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விஜேராம மாவத்தையில் - ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரின் வீடு அமைந்துள்ளது. இதனால், இப்பகுதியில் புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு முன்னரே, கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும், விரைவில் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## சந்திரிகா, கதிர்காமருக்கான பாதுகாப்பில் தளர்வு இல்லை

### ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவிப்பு

ஜனாதிபதிக்கும், முன்னாள் வெளி ... மொழியை வழங்கியிருப்பதாக,

## அமைச்சர்களுடன்

## மருதனார்மடத்தில் நேற்றிரவு

வற்றின் முன்பாகவுள்ள வீதித் தடைகளையும் அகற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# மருதனார்மடத்தில் நேற்றிரவு நபரொருவர் வெட்டிக்கொலை!

(மருதனார்மடம்)

மருதனார்மடம் பகுதியில் - மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவர், இனந்தெரியாதோரால் வெட்டிக் கொல்லப்பட்டார்.

நேற்றிரவு 11 மணியளவில் மருதனார்மடம் - உடுவில் வீதியில், நூலகத்திற்கு அண்மையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் - தெல்லிப்பளை புனர்வாழ்வு முகாமில் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றும் மருதனார்மடம், ஐந்தாவது ஒழுங்கையைச் சேர்ந்த அரியரத்தினம் ஹேமச்சந்திரா (வயது 57) என்ற நபரே வெட்டிக் கொல்லப்பட்டவராவார்.

மோட்டார் சைக்கிளில் இருந்தவாறே சரிந்திருந்த இவரது சடல

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்களுடன் பிரதமர் ரணில் சந்திப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களின் தற்போதைய நிலைமை குறித்து, பிரதமர் - நேற்று முன்தினம் அமைச்சர்வையைக் கூட்டி அவசரமாக ஆராய்ந்தார். நோர்வே குழுவினர் - புலிகளுடனான சந்திப்பின் விபரங்களைப் பிரதமருக்கு விளக்கியதையடுத்தே, பிரதமர் இச்சந்திப்பை நடத்தினார்.

## ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவிப்பு

ஜனாதிபதிக்கும், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் வழங்கப்படும் பாதுகாப்பு, எந்தவகையிலும் தளர்த்தப்படமாட்டாது என, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இப்பாதுகாப்பு ஏற்பாடுகள் தளர்த்தப்படவிருப்பதாக வெளியான செய்திகளுக்குப் பதிலளித்தபோதே ஒஸ்ரின் பெர்ணான்டோ இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேவேளை - பொலிஸ் திணைக்களமும் இவ்வாறான உறுதிமொழியை வழங்கியிருப்பதாக, அரச ஊடகப் பேச்சாளர் ஒருவர் கொழும்பில் தகவல் வெளியிட்டுள்ளார்.

## விண்ணாணம் விநாசியர்



அவ அதிகாரத்த பறிக்க, உவை பாதுகாப்ப விலக்க - சமா சூடு பிடிக்குது பாரப்பா...!

# நெடுந்தீவிலிருந்து வந்த புலிகளை தடுத்து வைத்த கடற்படையினர்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் நடைபெற்ற குமுதினிப் படகு படுகொலை நினைவு நாள் நிகழ்வில் கலந்துகொண்டு விட்டுத் திரும்பிய விடுதலைப் புலிகள் உறுப்பினர்களை, கரை திரும்பவிடாது கடற்படையினர் தடுத்தனர்.

குமுதினிப் படகில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவுநாள் நிகழ்வு, நேற்றுமுன்தினம் நெடுந்தீவில் உணர்பூர்வமாக நடைபெற்றது தெரிந்ததே.

இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காக விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட துணைப் பொறுப்பாளர் செம்மணன் தலைமையில், நான்கு போராளிகளும், ஆதரவாளர் ஒருவரும் சென்று திரும்பிக்கொண்டிருந்த வேளை, குறிக்காட்டுவான் இறங்குதுறைக்கு 200 மீற்றர் தொலைவில், இவர்களது படகை நிறுத்துமாறு தரையில் நின்ற கடற்படையினர் சைகை காட்டினர்.

படகை நோக்கித் தாக்குதல் நடத்துவதற்கான ஆயத்தங்கள்செய்வது போன்று போராளிகளை அவர்கள் பயமுறுத்தினர். நயினாதீவு, நெடுந்தீவு ஆகிய பகுதிகளுக்குச் செல்வதற்காக, இறங்குதுறையில் காத்திருந்த மக்களை அங்கிருந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ.மு. வேலைநிறுத்த முஸ்தீபு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா மற்றும் லக்ஷமன் கதிர்காமர் ஆகியோருக்கான, பாதுகாப்பு வசதிகளை அரசாங்கம் குறைத்துக் கொள்வதாகக் காரணம் காட்டி, நாடளாவிய ரீதியிலான வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்றுக்கு, பொதுஜன ஐக்கிய முன்னணி தயாராகிவருகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம இது தொடர்பாகத் தகவல் வெளியிடுகையில் -

உழைக்கும் வர்க்கத்தை ஒன்றிணைத்து, அரசாங்கத்தைக் கண்டிக்கவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டவுள்ளது. பாதுகாப்பு விலக்கப்பட்டதால் - ஜனாதிபதியினதோ கதிர்காமரினதோ உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுமாயின், அதற்கு அரசாங்கமே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும். இந்த அரசாங்கத்தினால் உழைக்கும் வர்க்கத்துக்கே அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றார்.

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி-913)





குமுதினிப் படுகொலையின் பதினெட்டாம் ஆண்டு நினைவு நாள் நெடுந்தீவில் நேற்று முன்தினம் நடைபெற்றபோது - நெடுந்தீவு அரசியற் பொறுப்பாளர் கண்ணன் நினைத்தூபிக்கு மரலஞ்சலி செலுத்துவதை முதலாவது படத்திலும், அஞ்சலி செலுத்தும் உறவினர் ஒருவர் கதறி அழுவதை இரண்டாவது படத்திலும், படுகொலையான எட்டுமாதக் குழந்தையின் தாயார் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்துவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.





கடலில் அமைக்கப்பட்ட மிதப்புச் சுடரினை - சம்பவத்தில் படுகொலையான நிர்மலாதேவியின் தந்தை பசுபதி ஏற்றிவைப்பதை முதற் படத்திலும், ஊர்வலத்திலும் நினைவுக் கூட்டத்திலும் கலந்துகொண்டோரை இரண்டாவது, மூன்றாவது படங்களிலும் காணலாம். படங்கள்: கண்ணன்.

# ஜனாதிபதியுடன் பிரதமர் பேசியே பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்!

## அமைச்சரவையின் இறுதித் தீர்மானமாம்

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றதன் பின்னர் எழுந்துள்ள அரசியல் யாப்பு சர்ச்சைக்கு, ஜனாதிபதியும் பிரதமரும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டுமென்பதே அமைச்சரவையின் இறுதித் தீர்மானம் என, மத்திய மாகாண அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள சர்ச்சையைப் பொதுமக்கள், அரசாங்க அதிகாரிகள் மத்தியில் கொண்டுசென்று பிளவுகளை ஏற்படுத்துவதை விட, புரிந்துணர்வுடன் செயற்பட்டு, பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமென்று அவர் தெரிவித்தார்.

1999 ஆம் ஆண்டு, ஜனாதிபதி தேர்தலில் கிடைத்த மக்கள் ஆணையையும், 2001 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த மக்கள் ஆணையையும் பிரதிநிதித்துவம் செய்யும் இரண்டு பிரிவுகள் உள்ளன.

மாற்றுக் கருத்துக்கள் ஏற்படும் போது ஜனாதிபதி தனக்குள்ள அரசியலமைப்பு அதிகாரங்களைப் பயன்படுத்தாமல், இறுதியாகக் கிடைத்த மக்கள் ஆணை மூலம் ஆட்சி நிர்வாகத்தை மேற்கொள்ளும் தரப்பினடன் இணைந்து செயற்படவேண்டும் என்று, அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் கூறினார்.

# விவசாய நில மீட்பு ஒன்றியம் தென்மராட்சியில் அமைப்பு

தென்மராட்சி பிரதேச எல்லைப் பகுதிக்குள் உள்ள விவசாய நிலங்களை இனங்கண்டு, மீண்டும் விவசாயத்தினை மேற்கொள்ளவென குழுவொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இக்குழுவிற்கு, 'தென்மராட்சி விவசாய நிலமீட்பு மீள்குடியேற்ற ஒன்றியம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

மீசாலையில் அமைந்துள்ள கமநல சேவைகள் நிலையத்தில் - பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடலிலேயே இக்குழு தெரிவுசெய்யப்பட்டது.

இக் கூட்டத்தில் பிரதேச பெரும்பாக உத்தியோகத்தர்கள் எஸ்.சத்தியேந்திரா, எஸ்.தவராசா, பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் ஞானவேல், இராணுவ சிவில் அதிகாரி மேஜர் குணசிங்க உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இக்குழுவின் தலைவராக இளைப்பாறிய அதிபர் வ.சின்னப்பாவும், செயலாளராக ரி.சிதம்பரப்பிள்ளையும், பொருளாளராக எஸ்.சண்முகநாதனும், நிர்வாக உறுப்பினர்களாக எஸ்.துரைராசா, இ.நாகராசா, செல்வி வி.தங்கரத்தினம், மா.லீலா வினோதன், எஸ்.சபாரத்தினம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (34)

# பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு; ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகின!

வேலையற்ற 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு, வேலை வாய்ப்புக்களை வழங்கும் நோக்குடன், இலங்கை வர்த்தக சம்மேளனங்களுடன் - வேலைவாய்ப்பு அமைச்சு நான்கு ஒப்பந்தங்களைச் கைச்சாத்திட்டுள்ளது.

இலங்கை வர்த்தக கைத்தொழில சம்மேளனம், இலங்கைத் தேசிய சம்மேளனம், இலங்கைத் தொழில் வர்த்தக சம்மேளனம் போன்றவற்றுடனேயே இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

'தருண அருண' திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்த ஒப்பந்தங்களுக்கு, உலக வங்கி 100 கோடி அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. (43)

# சமாதானத்தைக் குழப்புவதற்கு முயலும் தீயசக்திகள் பற்றி விழிப்பு வேண்டும்!

## மட்டு - அம்பாறை துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் கிருஷன்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக, தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை பிராந்திய துணை அரசியற்துறைப் பொறுப்பாளரும், ஊடகத் தொடர்பாளருமான கிருஷன் தெரிவித்துள்ளார்.

சமாதானத்தை விரும்பாத தீய சக்திகளே இவற்றின் பின்னணியில் செயற்படுவதாக குறிப்பிட்ட அவர், தமிழீழ விடுதலைப்புலிகளின் மீது பழியைச் சுமத்தி, நிலைமைகளைக் குழப்ப விரும்பும் சக்திகள் குறித்து பொதுமக்கள் விழிப்பாயிருக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த வன்முறைச் சம்பவங்கள் யாவும் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலேயே இடம்பெற்று வருகின்றன. இந்தப் பிரதேசங்களில் தாங்கள் நிராயுதபாணிகளாக மேற்கொண்டுவரும் அரசியல் நடவடிக்கைகளை குழப்பியடிக்க முற்படும் தேசவிரோத கும்பல்களே, இவ்வாறான நாசகார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளிலிருந்து தற்காலிகமாக ஒதுங்கினாலும், போர் நிறுத்தத்தைக் கைவிடவில்லையென்றும், எந்த வன்முறை நடந்தாலும் விழிப்பாகவிருந்து தீய சக்திகளை இனங்காணவேண்டும் என்றும், அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற புளொட் உறுப்பினர் மீதான குண்டுத் தாக்குதலுக்கும் தமக்கும் எந்தத் தொடர்புமில்லையென்பதை தமிழ் மக்கள் உணர்வார்கள் என்று கிருஷன் தெரிவித்துள்ளார்.

# சூழலைப் பாதுகாப்பது குறித்து பல்கலைக்கழகத்தில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

உலக சூழல் தினத்தை முன்னிட்டு, யாழ். பல்கலைக்கழக ஆளுநர் சபை மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் - யாழ். குடாநாட்டின் சூழல பாதுகாப்புத் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

சூழல் பாதுகாப்பு பாரிய சமூக, பொருளாதாரப் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. சூழல் மாசடைதல் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது. இவற்றைத் தடுப்பதற்கு தனிப்பட்ட, சமூக, திணைக்கள, பல்கலைக்கழக, பாடசாலை மட்டங்களில் திட்டங்களைத் தீட்டி தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என, கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கிய பிரமுகர்கள் தெரிவித்தனர்.

உலகநாடுகள் பல மில்லியன ரூபாவை அரச தனியார் நிறுவனங்கள மூலம் செலவு செய்து, சூழல் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் இக்கால கட்டத்தில், நமது நாடும் நாமும் இவ்விடயத்தில் அக்கறை குன்றியவர்களாகவே காணப்படுகின்றோம். இந்நிலை மாற்றப்படவேண்டும். இதற்காகப் பல்வேறு திட்டங்கள் மூலம் சூழல்பாதுகாப்பை மேற்கொள்ள வேண்டுமென இக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி ஜூன் 1ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரையான இரு வாரங்களும், உலக சுற்றாடல் தின வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதுடன், இக்காலப்பகுதி கொடி வாரமா கவும் அனுஷ்டிக்கப்படவுள்ளது. அத்துடன், "சூழல் நலன் பேணல் நிறுவனத்தை" அங்குரார்ப்பணம் செய்து, இந்நிறுவனத்தினூடாக பத்திரிகைகள், தொடர்பு ஊடகங்கள் வாயிலாக, சூழல் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துதல், சூழல் பாதுகாபபுத் தொடர்பாக அனைத்து நிறுவனங்களையும் ஒன்றிணைத்து - கருத்தரங்குகள், பதாதைகள், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், சூழல் பாதுகாப்பு பற்றிய ஆய்வரங்கு நடாத்துதல், பயன்தரும் மரநடுகைத் திட்டம், பொது இடங்களில் சிரமதானப் பணிகள் என்பன மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தக் கூட்டத்தில- துறைசார்ந்த விரிவுரையாளர்கள், நிறுவன அதிகாரிகள், பொருண்மிய மதியுரையகஇயக்குனர் மா.செவவேள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் தி.ஞானவேல் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## இறுதிப் போட்டியும் பரிசளிப்பும்

(நவக்கிரி)

அச்சுவேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம், யாழ். மாவட்டக் கழகங்களுக்கிடையில் நடத்திவரும் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியும், பரிசளிப்பு விழாவும், நாளைய தினம் சரஸ்வதி வித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

THE ROYAL COLLEGE OF JAFFNA
SPOKEN ENGLISH WITH GRAMMER
N.VIGNESWARAN ARCHERY.
BLACK ROAD, CHANKANAI,
426 (302) K.K.S. ROAD,
JAFFNA. (சி-891)

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
இளைய தளபதி விஜய், மீராஜஸ்மின் நடித்த
புதிய கீதை
10.30, 2.30, 6.30, 9.30
(சி-883)

நிறஞ்சனாஸ் சங்கானை
அஜித், சிம்ரன், கவுண்டமணி நடித்த
அவள் வருவாளா
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு (இரவு 8.45)
HANNIBAL
(சி-882)

# பேச்சுக்களில் ஏற்பட்டிருக்கும் சிக்கல்களை விரைவிலேயே தீர்த்துக்கொள்ள முடியும்!

## கொழும்பு திரும்பிய நோர்வே வெளிவிவகார அமைச்சர் கருத்து



(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதில் ஏற்பட்டிருக்கும் சிக்கல்களை விரைவில் தீர்த்துக்கொள்ள முடியும் என்று, நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தெரிவித்தார்.

கிளிநொச்சிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து விட்டு, கொழும்பு திரும்பிய பின்னர், நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் - செய்தியாளர்களிடம் பேசினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செய்தியாளர்கள் மத்தியில் தொடர்ந்து பேசிய ஜான் பீற்றர்சன் - சமாதான நடவடிக்கைகளில் அவ்வப்போது நெருக்கடிகள் எழுவது வழக்கமானதே.

சமாதான முயற்சிகளில் தற்போது நெருக்கடிகள் ஏற்பட்டிருந்தாலும்கூட, இரண்டு தரப்பினரும் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும் என்ற அர்ப்பணிப்புடன் இருக்கின்றனர்.

தற்போது பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை - காலஅவகாசம், விட்டுக்கொடுப்பு, பொறுமை என்பவற்றின் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

சமாதானப் பேச்சு மற்றும் ரோக்கியோ மாநாட்டிலிருந்து புலிகள் தற்காலிகமாக விலகிக்கொள்வதாக அறிவித்திருந்தாலும், அவர்கள் தொடர்ந்தும் போர்நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கிறார்கள். சமாதான முயற்சியிலிருந்து விலகமாட்டோம் என்று உறுதியளித்துள்ளார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் இன்று நாடுதிரும்பவுள்ளார். இவருடன் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனும் ஒஸ்லோ திரும்பத் திட்டமிட்டிருந்தார்.

எனினும், தற்போதுள்ள அரசியல் நிலையைக் கருத்திற்கொண்டு, சமாதான முயற்சிளை முன்னெடுத்துச் செல்வதற்காகப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் மேலும் சில நாட்கள் இலங்கையில் தங்கியிருப்பார் எனத் தெரியவருகின்றது.

இதேவேளை, புலிகள் - ரோக்கியோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்வர் என்று அரசாங்கம் நம்புவதாக அரசாங்கத்தின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேனாட் குணதிலக தெரிவித்தார்.

(01)

### வெசாக்கை முன்னிட்டு 1513 கைதிகளுக்கு விடுதலை

வெசாக் பண்டிகையை முன்னிட்டு சிறு குற்றங்களைச் செய்து, சிறைத் தண்டனை அனுபவித்துவந்த 1513 கைதிகள் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டனர்.

சிறைச்சாலை ஆணையாளர் - உள்துறை அமைச்சுக்குச் செய்த சிபார்சின் அடிப்படையில் 1513 கைதிகளுக்கான பொதுமன்னிப்பு உத்தரவை ஜனாதிபதி சந்திரிகா வழங்கினார்.

இதனடிப்படையில், சிறுகுற்றங்களைச் செய்தவர்கள் மற்றும் பிணைப்பணம் செலுத்தமுடியாது சிறைத்தண்டனை அனுபவித்தவர்களுமே விடுவிக்கப்பட்டனர். வெலிக்கடைச் சிறையில் இருந்து 421 கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களில் 380 ஆண்களும் 41 பெண்களும் அடங்குவர். போகம்பறைச் சிறைச்சாலையிலிருந்து 165 கைதிகளும், மகர சிறைச்சாலையில் இருந்து 143 கைதிகளும், அனுராதபுரச் சிறையிலிருந்து 176 கைதிகளும் விடுவிக்கப்பட்டதாகச் சிறைச்சாலை ஆணையாளர் சகபந்து தெரிவித்தார்.

# சமாதானப் பேச்சுக்களை தொடர்வதற்கு ஆக்கபூர்வமாக ஒத்துழைக்க வேண்டும்

## டென்மார்க் அரசாங்கம் வேண்டுகோள்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதற்கு அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் ஆக்கபூர்வமான முறையில் ஒத்துழைக்கவேண்டும் என்று டென்மார்க் அரசாங்கம் வேண்டுகோள், விடுத்துள்ளது.

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருப்பது தொடர்பாக, டென்மார்க் தூதரகம் நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை விடுத்தது.

இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

ஒஸ்லோவில் நடந்த உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் டென்மார்க் அரசாங்கம் வாக்குறுதி அளித்ததுபோலவே, சமாதான முயற்சிகளுக்கும் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கும், டென்மார்க் அர்ப்பணிப்புடன் உதவிகளைச் செய்யும்.

அடுத்த மூன்று ஆண்டுகளில் இலங்கைக்கு 220 கோடி ரூபாவை டென்மார்க் உதவியாக வழங்கவுள்ளது. இதைவிட, மேலும் அறுநூறு கோடி ரூபா கடன்களை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுக்கள் எவ்வளவு விரைவாக ஆரம்பிக்கப்படுகின்றதோ அவ்வளவு விரைவாக வடக்கு - கிழக்குப் பகுதிகளைப் புனரமைப்பதற்காகப் பத்து இலட்சம் டொலர்களை வழங்கவுள்ளதாகவும் டென்மார்க் தூதரகம் அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் தமது தற்போதைய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு - சமாதானப் பேச்சுக்களிலும், ரோக்கியோ மாநாட்டிலும் பங்கேற்றவேண்டும் என்றும் டென்மார்க் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# பொ.ஐ.மு.-ஜே.வி.பி. உடன்பாடு நாளை கைச்சாத்திடப்படலாம்!

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான புரிந் துணர்வு ஒப்பந்தம் நாளை கைச்சாத்திடப்படலாம் என்று .தெரிவிக்கப் படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை - ஜே.வி.பியின் முக்கியஸ்தர்கள் நாளை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர். இந்தப் பேச்சுக்களின்போதே இரு கட்சிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாதிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



உலகளாவிய ரீதியில் அமைதி ஏற்பட சைக்கிள் பயணத்தை மேற்கொண்டு வரும், இந்திய - குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த குமார் சோனி நேற்று முன்தினம் மட்டக்களப்பை வந்தடைந்தார். 2001 ஆம் ஆண்டு தனது சைக்கிள் பயணத்தை ஆரம்பித்த இவர் - நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளுக்குச் சென்ற பின்னர் இலங்கை வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரையே படத்தில் காண்கிறீர்கள்.

# தலைவரின் பாதையில் இணைவதன் மூலம் எமது இலக்கை விரைவில் அடையமுடியும்!

## குமுதினிப் படுகொலை நினைவுக் கூட்டத்தில் செம்மணன்



அரசாங்கத்துக்கு நிதியினைப் பெற்றுக் கொடுக்கவென நாம் மீண்டும் பேச்சுக்களில் இணையமுடியாது. சீரான வாழ்வு ஏற்படாமல், ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படாமல் மீண்டும் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள முடியாது-

எனக் குமுதினிப்படகு படுகொலையின் 18 ஆவது ஆண்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது - தமிழ் மக்கள் அனைவரையும் சோக்த்தில் மூழ்க வைத்த ஒரு நிகழ்வுதான் குமுதினிப் படுகொலை. 1985 ஆம் ஆண்டிலே எமது போராட்டத்தில் பெருந்தொகையானவர்கள் இணைந்து கொள்ள வழிவகுத்ததும் இப்படுகொலைதான்.

எமது பலத்தினால் வந்ததே இப்போதைய சமாதானம், இப்போது இது பலருக்கும் ஒரு குழப்பமான சூழல். பல கட்சிகளும், அமைப்புக்களும் இச்சூழலைக் குழப்ப முயற்சிக்கின்றன. இவ்வாறான குழப்பம் எமக்குப் புதிதல்ல. இதுவரைக்கும் ஆறு ஒப்பந்தங்கள் எழுதப்பட்டு கிழித்தெறியப்பட்டன.

தற்போதைய ஒப்பந்தம் எழுதப்பட்டு 15 மாதகாலமாகியும் இயல்பு நிலை திரும்பவில்லை. இயல்பு நிலையைக் கொண்டுவரவே அரசுக்கு நெருக்குதலைக் கொடுக்கின்றோம். போராளிகளையும், பொதுமக்களையும், கோடிக்கணக்கான சொத்துக்களையும் நாம் இழந்துள்ளோம்.

இதற்கான தீர்க்கமானமுடிவு கிட்டினால் தொடர்ந்து பேசுவோம். இல்லையெனில் அடுத்தகட்டமாக எதைச் செய்யவேண்டுமோ அந்த நிலைக்குத் தள்ளப்படுவோம்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பெருந்தொகையான படையினரால் மக்களின் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால்தான் படைவிலகல் வேண்டும், உயர்பாதுகாப்பு வலயம் விலக்கப்பட வேண்டும்.

அத்துடன், ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மக்களின உரிமையும், பொருளாதாரமும் கட்டியெழுப்பப்படவேண்டும். இதனால் தான் பேச்சுக்களிலிருந்து இடைவிலகினோம்.

சமாதானப் பேச்சுக்களை இழுத்தடிப்பதன் மூலம் புலிகள் வீடுகளுக்குச் செல்வார்கள். அதனால் படைக் கட்டுமானம் சிதறிவிடும். இதனால் அரசு சொல்வதை புலிகள் கேட்பார்கள் என எண்ணுகிறார்கள். ஆனால், இவர்கள் எதிர்பார்த்ததைவிட சமாதான காலத்தில் மட்டக்களப்பில் நான்காயிரம் போராளிகள் போராட்டத்தில் இணைந்துள்ளனர். விடுதலைப் புலிகளின் பலமே சமாதானத்திற்கு வழிசமைத்தது.

எமது போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் இருந்தே நெடுந்தீவு மக்கள் எமது போராட்ட நிகழ்வுகளுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கிவருகின்றனர். தலைவரின் பாதையிலே அனைவரும் வந்து சேரவேண்டும், பலப்படுத்தவேண்டும். அப்போதுதான் எமது இலக்குகளை இலகுவாக அடையமுடியும் எனத் தெரிவித்தார்.

# ஜனாதிபதி - பிரதமர் முறுகல் நிலை தமிழ் மக்களை சந்தேகிக்க வைக்கும்

## தென்மாகாண மகாநாயக்க தேரோ எச்சரிக்கை

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும், நாடாளுமன்ற அதிகாரத்தைக் கொண்டிருக்கும் பிரதமருக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் மோதல் - சமாதான முயற்சிகள் தொடர்பான சந்தேகங்களை தமிழ் மக்கள் மத்தியில் தோற்றுவித்திருப்பதாகத் தென்மாகாண மகாநாயக்கர் வண. கெட்டமானிய தம்மபிட்டிய தேரர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் நாடாளுமன்ற அதிகாரத்துக்கும் இடையில் ஏற்பட்டுள்ள சர்ச்சைகள் தொடருமேயானால், ரோக்கியோவில் நடைபெறவுள்ள உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் நிதியுதவிகள் கிடைப்பது பாதிக்கப்படும். உதவும் நாடுகள் நிதியுதவிகளை வழங்குவதற்குத் தயக்கம் காட்டலாம்.

இந்தத் தருணத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மிகவும் அவதானமாக விடயங்களைக் கையாள வேண்டும். ஜனாதிபதியும், பிரதமரும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, தமக்குள் இழுபறிநிலையில் ஈடுபட்டுள்ளனர்.

இருபெரும் கட்சிகளும் இவ்வாறு இழுபறிநிலையில் இருப்பதால், நாட்டிலுள்ள மூவின மக்களினதும் அமைதி குறித்த எதிர்பார்ப்புக்கள் பொய்த்துப் போகக்கூடியநிலை ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையை மாற்றியமைக்க வேண்டியது இருகட்சித் தலைவர்களினதும் பொறுப்பாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

## முதலாவது அகவையில்



பெயர் : ஸ்ரீ.கௌசிகன்
முகவரி: ஆனந்த மஹால், பண்ணாகம்.

## முதலாவது அகவையில்



பெயர் : கே.கஜேந்தினி
முகவரி: கிடாச்சூரி, வவுனியா.

## இரண்டாவது அகவையில்



பெயர் : ர.தர்மினி
முகவரி: 588, விநாயகபுரம், துனுக்காய்.

## இரண்டாவது அகவையில்



பெயர் : கி.அஜய்
முகவரி: பூதராயர் கோயில் வீதி, பருத்தித்துறை.

## ஆறாவது அகவையில்



பெயர் : கெ.பவித்திரன்
முகவரி: உடையார்கட்டு, முல்லைத்தீவு.

பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-------------------------------

முகவரி :-------------------------------

பிறந்த ஆண்டு:-------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-------------------------------
பெற்றார் ஒப்பம்


# வீதி ஒழுங்குகளை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்!

## சுன்னாகம் பொலிஸார் அறிவிப்பு

(உடுவில்)

வீதி ஒழுங்குமுறைகளை மீறுவோர் மீது, சுன்னாகம் பொலிஸார் இனிவருங்காலங்களில் கடும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக அறிவித்துள்ளனர்.

குறிப்பாக- சைக்கிள்களில் பக்கம் பக்கமாகச் செல்பவர்கள் மீதும், சைகை இன்றி வாகனங்களைத் திடீரெனத் திருப்புவோர், திடீரென முன், பின் பார்க்காது நிறுத்துவோர் போன்ற குற்றச் செயல்களைப் புரிவோர் மீது நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யவுள்ளதாக, போக்குவரத்துப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

சமாந்தரமாகச் செல்வோரில் பாடசாலை மாணவர்களே மிகக் கூடுதலானவர்களாகும். எனவே, ஆசிரியர்கள் வீதி ஒழுங்குமுறைகள் குறித்து மாணவர்களுக்கு அறிவுறுத்துமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர். (101)

## கொழும்புத்துறை மகா வித்தியாலயத்தில் எழுச்சிநாள்

(கொழும்புத்துறை)

2 ஆவது உலக இந்து மாநாட்டையொட்டி கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சிகளின் இறுதி நாள் நிகழ்வு கடந்த 9 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் - சிறப்பு விருந்தினரான வைத்திய அதிகாரி ஆ.திருநாவுக்கரசுவின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து- தமிழகத்திலிருந்து வருகை தந்த பேராசிரியர் இரா.செல்வகணபதி, பேராசிரியர் ஏ.மலர், பேராசிரியர் ச.சுதர்சன், பேராசிரியர் ரவிச்சந்திரன், பேராசிரியர் மலையமான் தம்பதியினர், பேராசிரியர் பாலாமணி ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

## விவசாய வார நாடகப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட மாணவர் ஒன்றியம் நடாத்தும், விவசாய வாரத்திற்கான நாடகப் போட்டி இன்று பிற்பகல் ஒருமணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# உடுவில் குளத்திற்குள் புதுவகையான புற்கள்

கந்தரோடை - உடுவில் குளத்திற்குள் புதுவகையான முள்ளுடன் கூடிய புற்கள் வளர்ந்துள்ளன.

இக்குளம், கோடைகாலத்தில் கால்நடைகளின் மேய்ச்சல் நிலமாகவும், சலவைத் தொழிலாளர்கள் தொழில் செய்யும் இடமாகவும் இருப்பதனால், இப்புதுவகைப் புல்லின் வளர்ச்சி பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது.

கும்பல்கும்பலாக ஊசி போன்ற வடிவத்தில் இவ்வகைப்புல் காணப்படுவதால் - இதற்குள் மலேரியா, யானைக்கால் போன்ற கொடிய நோய்களை உருவாக்கக்கூடிய நுளம்புகள் பெருக வாய்ப்புக்கள் உள்ளன. இப்புல்லைக் கால்நடைகள் உணவாக உட்கொள்ளாமல் விலகிச் செல்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (101)

# சிறுவர் உரிமையை வலியுறுத்தி யாழ்.நகரில் நடந்த பேரணி

திருமறைக் கலாமன்றத்தின் கலை மாநாட்டின் இரண்டாம் நாளான நேற்று, சிறுவர் பாசறையும், சிறுவர் உரிமையினை வலியுறுத்தும் பேரணியும் இடம்பெற்றன.

மேற்படி பேரணியானது, நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் யாழ். வீரசிங்கம் மண்டப வாயிலிலிருந்து ஆரம்பமாகி, சத்திரத்துச் சந்தி வழியாக ஆஸ்பத்திரி வீதியினை அடைந்து, அங்கிருந்து கோவில் வீதிவழியாக பிரதான வீதியினை அடைந்து, இரவு 7 மணியளவில் திருமறைக் கலாமன்ற அரங்கத்தைச் சென்றடைந்தது.

இந்நிகழ்வில் - மூலவள சிறார்களும் தம்முடைய பாரம்பரிய நடன முறைகளில் ஆடியவண்ணம், சிறுவர் உரிமை தொடர்பான வசனங்கள் தாங்கிய அட்டைகளையும் ஏந்தியவண்ணம் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (சு)

# நிவாரணம் பெற்றுத் தருமாறுகோரி தென்மராட்சி அரச ஊழியர் மகஜர்!

## மனித உரிமை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில், மீளக் குடியமர்ந்துள்ள அரச ஊழியர்கள் தமக்கு நிவாரணம் பெற்றுத்தருமாறு கோரி, யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் மகஜரொன்றைக் கையளித்துள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் 2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தததினால் தமது வீடுகள் சேதமடைந்த நிலையிலும், "உ" பங்கீட்டு அட்டைக்காரர் என்ற ரீதியில் எமக்கு எந்தவொரு நிவாரணமோ, உதவிகளோ அரசிடமிருந்தோ, அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்தோ கிடைக்கவில்லை என அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தென்மராட்சி மக்கள் அனைவரும் பாதிப்பிற்குள்ளாகிய போதிலும் - அரச அதிகாரிகளும், அரச சார்பற்ற நிறுவனங்களும் மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் எம்மைக் கவனிப்பதில்லை.

கிடைக்கும் உதவிகளை, "அ" பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கு வழங்கி வருகின்றனர். சம்பளத்தைத் தவிர வேறு வருமானங்கள் எதுவுமில்லாத அரச ஊழியர்களுக்கு எவ்வித நிவாரணமும் வழங்கவிடாது அரச அதிகாரிகளால் தடுக்கப்படுகின்றது எனவும் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (34)

# தமிழீழ மாணவர் எழுச்சி நாள் மூன்று தினங்கள் பிரகடனம்!

(கிளிநொச்சி)

தமிழீழ மாணவர் எழுச்சி நாட்களாக- ஜூன் மாதம் 4,5,6 ஆகிய மூன்று தினங்களும் தமிழீழ மாணவர் அமைப்பினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இத்தினங்களில் தியாகி பொன். சிவகுமாரனின் திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடரேற்றி மலர் வணக்கம் செலுத்துவதற்காக - திருவுருவப் படம் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

தமிழீழ மாணவர் எழுச்சிநாளான ஜூன் 6 ஆம் திகதி காலை 8.30 மணிக்குத் தேசியக் கொடியேற்றலுடன் நிகழ்வுகள் பாடசாலை மட்டத்தில் ஆரம்பமாகும்.

மாலை 7 மணிக்குக் கலை நிகழ்வுகள், மாணவர் எழுச்சிநாள் போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பு என்பன இடம்பெறும்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் 9 புதிய சுகாதார நிலையங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒன்பது ஆரம்ப சுகாதார நிலையங்களைப் புதிதாக அமைப்பதற்குக் கிளிநொச்சிப் பிரதி மாகாண சுகாதார வைத்திய அதிகாரி நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - கனகாம்பிகைக் குளம், இராமநாதபுரம், உதயநகர் மேற்கு, ஆனைவிழுந்தான் போன்ற இடங்களிலும் - பூநகரி வைத்திய அதிகாரி பிரிவில் - ஆலங்கேணி, நாலாங் கட்டை, பள்ளிக்குடாவிலும்,

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - புளியம் பொக்கணையிலும்,

பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - பளையிலும் என மொத்தமாக 9 ஆரம்ப சுகாதார வைத்திய நிலையங்களே புதிதாக அமைக்கப்படவுள்ளன. (108)

## பொதுஅறிவுப் போட்டியில் பரிசுபெற்றோர் விபரம்!

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம் நடத்திய சைவ சமயப் பொது அறிவுப்போட்டி பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

த.சுதர்சினி (யாழ்ப்பாணம்), ஜீ.கஜீபா (அளவெட்டி), க.சக்திபாலன் (உடுவில்), ச.சக்திதாஜினி (உடுவில்), கே.யோகீதன் (யாழ்ப்பாணம்), த.ராஜரமணன் (யாழ்ப்பாணம்), சி.அபிராமி (யாழ்ப்பாணம்), இ.ராஜ்குமார் (யாழ்ப்பாணம்), சா.விதுஷன் (யாழ்ப்பாணம்), நா.ஜனார்த்தனன் (யாழ்ப்பாணம்) ஆகியோர் பரிசுபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## வார்த்தை விளையாட்டு - 33

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பி | | 2 | 3 | ர் | |
| | 4 அ | 5 | | | று |
| | | 6 சி | | | 7 த |
| 8 | வா | | கை | 9 | |
| 10 | | | | | |
| 11 தி | | | | | |

முழுப் பெயர் : ..........................................

கற்கும் பாடசாலை : ..........................................

கற்கும் தரம் : ..........................................

முகவரி : ..........................................

.............................. ..............................

கையொப்பம் திகதி

### இடமிருந்து வலம்

1. அரசாங்கத்தின் தலைவர் (ரணில் வகிக்கும் பதவி)
4. நெல்லில் இருந்து தயாராகும் உணவுப்பொருள்.
5. கழுகு இனப்பறவை.
6. தென்னமெரிக்க நாடு.
8. ஆசை.
9. தந்திரமான மிருகம்.
10. ஒலியெழுப்பும் கருவி (இதில் வலம்புரி பிரசித்தமானது).
11. குறிப்பிட்டதொரு பங்கை இவ்வாறு கூறுவர் (வலமிருந்து இடமாக).

### மேலிருந்து கீழ்

2. முனிவன் என்றும் பொருள்படும்.
3. வாசனை மிக்க மலர்.
4. நிலத்தைத் தோண்டப் பயன்படுத்தப்படும் ஆயுதம்.
7. பயன்படுத்தப்படாத நிலம்.
8. சோம்பல்.
9. விரல்களில் வளர்வது.

### வார்தவை விளையாட்டு - 32 இன் சரியான விடைகள்



**இடமிருந்து வலம்**

1. மணிக்கூடு.
2. ருவாண்டா.
6. துரவு.
7. அச்சம்.
9. ஈகை.
10. பரிவு.

**மேலிருந்து கீழ்**

1. மருந்து.
2. கூடாரம்.
3. சடலம்.
5. வானரம்.
8. சரி.

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேறகாணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில,



**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.



என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 21-05-2003
சரியான விடை எழுதிய மூவரை குலுக்கல் மூலம் தெரிவுசெய்து பரிசு வழங்கப்படும்.

### வார்த்தை விளையாட்டு - 32

இல் பங்குபற்றி சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1 ஆம் பரிசு -*
**ஆனந்தமூர்த்தி வைகரன்**
நாகர்கோயில் மேற்கு,
நாகர்கோயில்.

*2 ஆம் பரிசு -*
**இராசரத்தினம் கரிகரன்**
அரசடி வீதி,
தாவடி வடக்கு, கொக்குவில்.

*3 ஆம் பரிசு -*
**ச. லூட்ஸ் விதுஷா**
C/O இ.சத்தியநாதன்,
ஏழுகோயிலடி, ஏழாலை மத்தி,
ஏழாலை.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*



# சிறுவர் அரங்கம்

## முயலார் வாங்கிய

(சென்றவாரத் தொடர்ச்சி..)

நான் இதோ புதரினுள் ஒளிந்திருக்கிறேன். நீர் இந்தச் சங்கதியை அவர்களுக்குச் சொல்லும்" என்று கூறிவிட்டு முயலார் பக்கத்திலிருந்த பற்றையின் பின்னால் சென்று மறைந்துகொண்டார். ஆனால், பற்றையினூடாக அவரின் சப்பாத்துக்கள் மட்டும் வெளியே தெரிந்தன.

கழுகார் அவரின் செயலைக்கண்டு சிரித்தார். "ஓநாயாருக்கும், நரியாருக்கும் பயந்து ஒளிக கிறீர். ஆனால் ஒளித்திருக்கும் இடத்தை அவர்களுக்குச் சொல்லும்படி எனக்குச் சொல்கிறீர். நீர் மறைந்து கொண்டாலும், உமது சப்பாத்துக்கள் வெளியே தெரிகின்றன. இதெல்லாம் என்ன? நீர் பெரிய புத்திசாலி என்றல்லவா நினைத்திருந்தேன்" என்றார் கழுகார்.




முயலார் பற்றைக்குள் இருந்தபடி சொன்னார் "நான் புத்திசாலியோ? முட்டாளோ? உனக்கென்ன? நான் மறைந்திருப்பதை அவர்களுக்குச் சொல்லும். அதுபோதும்."

கழுகார் அதன் பின்பு வாதாடவில்லை. விரைவாகப் பறந்துசென்று நரியாரையும், ஓநாயாரையும் அவர்களின் மறைவிடத்தில் கண்டு, முயலார் ஒளித்திருப்பது பற்றிச் சொன்னார்.

அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி, அவர்கள் முயலார் ஒளித்திருந்த பற்றையை நோக்கி விரைந்து ஓடிவந்தார்கள். இதற்கிடையில் முயலார் தமது சப்பாத்துக்களை கழற்றி அந்தப் புதரில் வைத்துவிட்டு, வேறொரு புதரின் பின் சென்று ஒளித்துக்கொண்டார். இது ஓநாயாருக்கோ, நரியாருக்கோ தெரியாது.

புதர் அடர்த்தியாகவும், முட்கள் நிறைந்ததாகவும் இருந்தது. அவர்களால் புதருக்குள் சென்று முயலாரைப் பிடிப்பது முடியாது.

## புதுச்சப்பாத்து

எனவே, அவர்கள் புதரின் முன்னால் நின்று முயலாரை வெளியில் வருமாறு அழைத்தார்கள்.

"ஓ முயலாரே" நரியார் கூவினார். பதில் இல்லை. "முயலாரே நீர் முட்புதருக்குள் மறைந்திருப்பது எங்களுக்கு நன்றாகத் தெரிகிறது. உமது உடல்தான் மறைந்திருந்தாலும் - உமது பெரிய கால்களும், சப்பாத்துக்களும் வெளியிலே நன்றாகத் தெரிகின்றன. முட்டாளே! உமது உயிர் மீது ஆசையிருந்தால் உடனே வெளியில் வந்துவிடும். என்று ஓநாயார் எச்சரித்தார்.

இப்பொழுதும் பதிலில்லை.

"உம்மைப் புதருக்குள்ளேயே வைத்து சட்னியாக்கி விடுவோம். வெளியே வருகிறீரா? இல்லையா" என்றார் நரியார்.

மீண்டும் மௌனம்.

"ஓநாயாரே வாரும் இரண்டு தடிகள் பிடுங்கிப் புதரை - அடித்துச் சிதைப்போம். முயலார் என்ன ஆகிறார் என்று பார்ப்போம்" என்று நரியார் சொன்னதைக்கேட்டு, முயலாருக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. அவர் தான் ஒளித்திருந்த புதரினூடாக அவர்களின் நடமாட்டங்களைக் கவனமாகப் பார்த்த வண்ணம் இருந்தார்.

நரியார் கூறிய ஆலோசனையை ஏற்ற ஓநாயார், தமக்கும் நரியாருக்குமாக இரு தடிகளைப் பிடுங்கிக்கொண்டார். பின்பு இருவரும் தங்கள் கோட்டுக்களைக் கழற்றி ஒரு பக்கமாக வைத்துவிட்டுப் புதரை அடித்து அழிக்கும் வேலையில் ஈடுபட்டார்கள்.

மத்தியான வேளை, கொடிய வெயில் இருவருக்கும் வியர்வை உடலெங்கும் ஆறாக ஓடியது. ஆனாலும், அவர் தங்கள் அழிப்பு வேலையில் தொடர்ந்து ஈடுபட்ட வண்ணமே இருந்தனர்.

இவ்வேளையில் முயலார் தமது புதரிலிருந்து வெளிப்பட்டதோ, தங்கள் கோட்டுக்களை எடுத்துக்கொண்டு ஓடியதோ அவர்களுக்குத் தெரியாது.

மிகவும் களைப்படைந்த நரியார் - தமது வியர்வையைத் துடைக்கக் கைக்குட்டையை எடுப்பதற்காகக் கோட்டைத் தேடியபொழுது...

இருவரின் கோட்டுகளும் அங்கு இல்லை.

"போக்கிரி முயல் எங்கள் கோட்டுக்களை எடுத்துச்சென்று விட்டான்" என்று ஓநாயார் தலையில் கைகளை வைத்துக்கொண்டு நிலத்தில் அப்படியே இருந்துவிட்டார்.

நரியார் கவலையுடனும், கோபத்துடனும் புதரை நெருங்கிச் சப்பாத்துக்களை இழுத்தார். அவை இலகுவில் வெளியில் வந்தன. அவற்றை அவர் வீசி எறிந்தார். அந்த அளவில் அவருக்குத் திருப்தி.

இருவருக்கும் ஏமாற்றம் என்றால் அப்படி ஒரு ஏமாற்றம். அவர்கள் தலை குனிந்தபடி தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பினார்கள்.

அடுத்தநாள் முயலார் புதிய மஞ்சள் சப்பாத்தும், பச்சை லேசும் அணிந்து கம்பீரமாகத் தலைநிமிர்ந்து நடந்தார்.

"அட, உமது பழைய சப்பாத்து எங்கே? எப்படிப் புதுச்சப்பாத்து வாங்கினீர்?" என்று அவரைக் கண்டவர்கள் கேட்டார்கள்.

"என் அருமை நண்பர்களான நரியாரும், ஓநாயாரும் நான் பழைய சப்பாத்து அணிவதை விரும்பவில்லை. நரியார் அவற்றை வாங்கி எறிந்துவிட்டார். அவரும் ஓநாயாரும் அன்பளிப்பாய் தந்த அவர்களின் கோட்டுக்களை விற்று இந்தப் புதிய சப்பாத்தை வாங்கினேன் என்றார் முயலார்.

## கண்டங்களின் முதல் பத்து பெருநகரங்கள்

| ஆபிரிக்கா | ஆசியா | அவுஸ்திரேலியா | ஐரோப்பா |
|---|---|---|---|
| 1. கெய்ரோ | 1. மும்பாய் | 1. சிட்னி | 1. மொஸ்கோ |
| 2. அலெக்சாண்ட்ரியா | 2. சியோல் | 2. மெல்போர்ன் | 2. லண்டன் |
| 3. கின்ஷாசா | 3. ரோக்கியோ | 3. பிரிஸ்பேன் | 3. இஸ்தான்புல் |
| 4. கசாப்லங்கா | 4. ஷாங்காய் | 4. பெர்த் | 4. சென்ற்ட் பீட்டர்ஸ்பர்க் |
| 5. கிஸா | 5. ஜகார்த்தா | 5. அடிலெய்ட் | 5. மாட்ரிட் |
| 6. அபித்ஜான் | 6. பாக்தாத் | 6. ஆக்லாந்து | 6. பெர்லின் |
| 7. அல்ஜியர்ஸ் | 7. பீகிங் | 7. வெலிங்டன் | 7. ரோம் |
| 8. அடிஸ்அபாபா | 8. ஹொங்கொங் | 8. கிறைஸ்ட்சேர்ச் | 8. கீவ் |
| 9. லாகோஸ் | 9. தெஹ்ரான் | 9. நியூகாஸ்டில் | 9. பாரிஸ் |
| 10. திரிபோலி | 10. தியாஞ்சின் | 10. கான்பெரா | 10. புடாபெஸ்ட் |

# இளந்தேனீக்கள் கழகம்

## அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :-
தே.நிரோஜித்
கற்கும் பாடசாலை :-
புனித பத்திரிசியார் கல்லூரி.
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
துடுப்பாட்டம், கதைப்புத்தகம் வாசித்தல், கல்வித்துறை.



முழுப்பெயர் :-
ப.கம்சலா
கற்கும் பாடசாலை :-
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :
வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.



முழுப்பெயர் :-
நா.கிருசாந்தினி
கற்கும் பாடசாலை :-
புனித மரியாள் மகளிர் றோ.க. வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், கட்டுரை எழுதுதல், விஞ்ஞானம், விளையாட்டு.



முழுப்பெயர் :-
த.ஜீவனா
கற்கும் பாடசாலை :-
கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை.
கற்கும் தரம் :- 11
ஆர்வமுள்ள துறைகள் :-
சங்கீதம், பத்திரிகை வாசித்தல், சித்திரம்.

முழுப்பெயர்:-
க.பிரசாந்
கற்கும பாடசாலை :-
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
பாட்டு, கிரிக்கெட்.

முழுப்பெயர்:-
சி.மதுசுதன்
கற்கும் பாடசாலை :-
மாணிக்கவாசகர் வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 3
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலிகேட்டல், புத்தகம் வாசித்தல்.

முழுப்பெயர்:-
ந.பிரியங்கா
கற்கும் பாடசாலை :- வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், கணிதம், தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர்:-
சு.மிலக்சிகா
கற்கும் பாடசாலை :-
உடுவில் மகளிர் கல்லூரி.
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திகைவாசித்தல், நடனம், ரீவி பார்த்தல்.

# விடுகதைகளும் விடைகளும்

1. ஒற்றைக் கண் மனிதன், ஓடியோடி வேலியடைப்பான். அவன் யார்?
   ஊசி, நூல்.
2. உச்சியில் கிரீடம், உடம்பெல்லாம் கணகள். அது என்ன?
   அன்னாசிப்பழம்.
3. அப்பன் சொறியன், ஆத்தாள் சடைச்சி, பிள்ளையோ சர்க்கரைக்கட்டி. அது என்ன?
   பலாப்பழம்.
4. இவனுக்கு ஒருமுறை பல்லு விழுந்தால், மறு முறை முளைக்காது. இவன் யார்?
   சீப்பு.
5. அடிக்காத பிள்ளை அலறுது. அது என்ன?
   சங்கு.
6. அட்டைக்கரிப் பெண்ணுக்கு உச்சந் தலை மஞ்சள். அது என்ன?
   பனங்காய்.

மயூரி மகேந்திரன்
தரம் - 9
யாழ். பண்டத்தரிப்பு
மகளிர் உயர் கல்லூரி

# பழமொழிகள்

1. அடியைப் போல அண்ணன் தம்பி உதவாது.
2. ஆசை வெட்கம் அறியாது.
3. உண்ணாச் சொத்து மண்ணாகும்.
4. எடுக்கிறது பிச்சை, ஏறுவது பல்லக்கு.
5. எரிகற வீட்டில் பிடுங்கினது இலாபம்.
6. ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம்.
7. பணம் பந்தியிலே குணம் குப்பையிலே




து.விதுஷன்
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.

# உங்கள் கைவண்ணம்



வீ.இந்துஜா
தரம் - 6,
யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயம்



வீ.கம்சானந்,
தரம் - 1,
யாழ்.கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

# பொது அறிவுத்துளிகள்

1. உலகில் அதிக கடத்தல்கள் நடைபெறும் நாடு எது? கொலம்பியா.
2. முதன் முதலில் தபால் அட்டையைப் பயன்படுத்திய நாடு எது? அவுஸ்ரேலியா.
3. நைல் நதியின் கொடை எனச் சிறப்பிக்கும் நாடு எது? எகிப்து.
4. இலங்கையின் மிக நீளமான ஆறு எது? மகாவலி கங்கை.
5. மனித உடலில் உள்ள மிகப்பெரிய சுரப்பி எது? உமிழ் நீர்ச்சுரப்பி.
6. இலங்கையின் தற்போதைய பரப்பளவு யாது? 65610 சதுர கிலோ மீற்றர்.
7. இலங்கையில் மிகக்குறுகிய காலம் பிரதமர் பதவியை வகித்தவர் யார்? கலாநிதி W.தஹநாயக்கா.
8. டைனமோவைக் கண்டுபிடித்தவர் யார்? மைக்கல் பரடே.

ப.மதிவதனி,
தரம் - 6, யாழ். மகாஜனாக் கல்லூரி.

# My pet

My pet is a dog. It's name is tommey. It is a small dog. It is very beautiful. It is brown in colour. It has a short beautiful tail. My pet eats rice and curry. Tommey can run fast. I play with him. I love my pet very much.

*Puvithas,*
*Maruthady valvetti,*
*valvettiturai.*

# நான் படித்த பாடசாலைகள்

நான் முன்னர் படித்த பாடசாலைகள் கிளிநொச்சி மகா வித்தியாலயம், அக்கராயன் மகா வித்தியாலயம் என்பனவாகும். இடம் பெயர்ந்து சென்ற என்னை, அபயக்கரம் நீட்டி அழைத்து என்னை இந்நிலையில் உயர்த்திவிட்ட இப்பாடசாலைகளை நான் மறக்க முடியாது.

நான் தரம் 1 முதல் தரம் 4 வரை படித்த பாடசாலை கிளிநொச்சி மகா வித்தியாலயம் ஆகும். என் அடிப்படைக் கல்வியைச் சரியாகப் போதித்து, என்னை தரம் 4 வரை உயர்த்தியது இப்பாடசாலை. கல்வியிலும், விளையாட்டிலும் மிகத்திறமையானவர்களைப் இப்பாடசால்ல உருவாக்கியுள்ளது.

கிளிநொச்சி மகா வித்தியாயம் சொந்த இடம் திரும்பியதும் என்னையும் தன் பாடசாலை மாணவியாக்கியது அக்கராயன் மகா வித்தியாலயம் ஆகும். 5 முதல் தரம் 6 வரை என்னைக் கற்பித்து புலமைப் பரிசில் பரீட்சையிலே சித்திபெற வைத்தது இப்பாடசாலையே. தன் கல்வி, விளையாட்டு திறமையினாலே பல மாணவர்களைத் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியிலே பங்குபெறச் செய்து, வெற்றியீட்டிய பெருமை இப்பாடசாலையைச் சாரும்.

நான் நாட்டு நிலைமைகளினால் வேறு பாடசாலைகளிலேயே படித்தாலும், இப்பாடசாலைகளை மறக்கவேமாட்டேன். இப்பாடசாலைகள் கல்லூரியாக மாறி, பாரினிலே புகழ் பரப்ப வாழ்த்துகிறேன்.

ஆக்கம். அ.ரேணுகா
தரம் - 7, பளை மத்திய கல்லூரி.

# "வண்ண நிலா"



வண்ண நிலா வானிலே
வளர்ந்து வரும் இரவிலே
மண்ணில் வாழும் எங்களை
மகிழ்வு கொள்ளச் செய்யுமே!

முழு நிலா ஆனதும்
இரவு மறைந்து போகுமே.
அழும் குழந்தை பார்த்துமே
அடங்கி அமைதி கொள்ளுமே!

அரியாலையூர்,
சி.சிவதாசன்.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்

முழுப் பெயர் :...............................................
கற்கும் பாடசாலை :...............................................
கற்கும் தரம் :...............................................
வீட்டு முகவரி :...............................................
பிறந்த திகதி :...............................................
ஆர்வமுள்ள துறைகள் :...............................................
...............................................

................................ ................................
திகதி ஒப்பம்

................................ ................................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P.- 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதுஓர் நோய்

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## அர்ப்பணிப்பு மட்டுமல்ல பலமும் விழிப்பும் கூடவே!

"சர்வதேச சமூகத்திடம் உதவிகோரிச் செல்லும்போது, எமக்குத் தாயகப்பகுதியில் நிர்வாக அதிகாரமுள்ள ஒரு கட்டமைப்பை நிறுவாமல், அதற்கான அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளாமல் செல்லமுடியாது. சிறான் அமைப்பிற்குப் போதிய அதிகாரம் இன்றிய நிலையில், நாம் ரோக்கியோ செல்வது பயனற்ற ஒன்று. அரசுக்கு நிதி சேகரித்துக் கொடுப்பது எமது பணியல்ல'' என விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டைத் திட்டவட்டமாக நோர்வேக்குத் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாடு - தலைவர் பிரபாகரனுக்கும், நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்ஸனுக்கும் இடையே நடந்த சந்திப்பில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

ரோக்கியோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிலிருந்தும், சமாதானப் பேச்சுக்களிலிருந்தும் தற்காலிகமாக விடுதலைப் புலிகள் ஒதுங்கியிருக்கும் நிலையில் - சர்வதேச அளவில் தமது நிலைப்பாட்டுக்கான காரணத்தைத் தெளிவுபடுத்திவரும் விடுதலைப் புலிகள் - அனுசரணையாளர்களாகப் பங்கேற்றுவரும் நோர்வேத் தரப்பினருக்கும், தமது முடிவின் நியாயத்தை உத்தியோகபூர்வமாகத் தெரிவித்திருக்கின்றனர்.

கடந்த சமாதானப் பேச்சுக்களின் விளைவாக - தமிழ் மக்களின் வாழ்வில் இயல்புநிலை தோற்றுவிக்கப்படாததையும் - மக்களுக்கான அவசர மனிதாபிமான, புனர்வாழ்வுத் தேவைகள் நிறைவுசெய்யப்படாததையும் சுட்டிக்காட்டி - நோர்வேத் தரப்பிற்கு, நிலைமையை விளங்கப்படுத்திய புலிகள் - இனிமேலும் இத்தகைய போக்கை அனுமதிப்பது, தமிழ்மக்களிடம் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்திவருகின்றது என்பதையும் வலியுறுத்தியிருக்கின்றனர்.

சமாதானப் பேச்சுக்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சிறான் - பெயரளவில் செயற்படுகிறதே தவிர - அதனை ஆக்கபூர்வமான அமைப்பாக மாற்றுவதற்கான உதவிகள் கிடைக்காததையும், வட - கிழக்குப் புனர்வாழ்வு நிதியத்தின் செயற்பாடற்றதன்மையையும், விடுதலைப் புலிகள் விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் கூறுவதுபோல - அதிகாரமுள்ள கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படாமல், வெறுமனே புனர்வாழ்வு - புனரமைப்புப் பற்றிப் பேசுவதும் - கிடைக்காத நிதியுதவியை எண்ணியவாறு திட்டங்களை காகித வடிவில் வரைந்து வைத்திருப்பதும் - தமிழ்மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது என்பதை, இதன்மூலம் நோர்வேத் தரப்பு உணர்ந்திருக்கும்.

தமிழ்மக்களுக்கான உதவிகள் பற்றிய நிச்சயமின்மையுடன், தெளிவான செயற்பாடு ஒன்று அரசாங்கத்திடம் இல்லாதபோது - சர்வதேச உதவியைக் கோருவதற்கு, விடுதலைப் புலிகள் இணங்கப்போவதில்லை என்ற உறுதியான செய்தியும், நோர்வேத் தரப்பினூடாக சர்வதேசத்தைச் சென்றடைந்திருக்கின்றது.

அரசாங்கத்திற்கு நிதியுதவியைப் பெற்றுக்கொடுப்பதற்காக - விடுதலைப் புலிகள் ரோக்கியோ வரவேண்டிய அவசியமில்லை, அது விடுதலைப் புலிகளின் பணியுமல்ல என்ற அழுத்தந்திருத்தமான உறுதி - தமிழ் மக்கள் ஒன்றும் ஏமாளிகளல்லர் என்பதையும், இழுத்த இழுப்பிற்கெல்லாம் இசைந்துபோகக்கூடியவர்களல்லர் என்பதனையும் சர்வதேசத்தின் கவனத்திற்கு வலுவாக எட்டச்செய்திருக்கிறது.

இது, சர்வதேசத்துக்கு மட்டுமானது என்பது மட்டுமல்ல - அரசாங்கத்திற்கான எச்சரிக்கையுமாகவே அமைகன்றது. கடந்த காலங்களில், சிங்கள அரசாங்கங்கள் - தமிழ்மக்களை ஏமாற்றியது, ஒடுக்கியது போன்று - இனியும் நடப்பதற்கு வாய்ப்பேயில்லை என்பதை, விடுதலைப் புலிகள் நெற்றியிலடித்தாற்போலச் சொல்லியிருக்கிறார்கள்.

வடக்கு - கிழக்கு மக்களுக்குப் பயன்தரும் வகையில், ஆக்கபூர்வமானவகையில் பெறப்படும் நிதியுதவியைப் பயன்படுத்த முடியுமாக இருக்கக்கூடிய - சாத்தியப்பாடான, உறுதியான ஏற்பாடுகளைச் செய்வதை விடுத்து - இனியும் பேச்சுக்களை இழுத்தடிப்பதாகவோ, வெற்று வாக்குறுதிகளை வழங்குவதாகவோ, இலங்கை அரசாங்கம் செயற்படுமாக இருந்தால் - அதன் விளைவுகள் எவ்வாறிருக்கும் என்பதையே, இன்றைய நெருக்கடி நிலை, சர்வதேசத்திற்கு விளக்கியிருக்கிறது.

இந்தவகையில் - விடுதலைப் புலிகளின் நிலைப்பாடும், இன்று ஏற்பட்டிருக்கின்ற சூழலும் - சமாதான முயற்சியை நியாயமான திசையில் முன்னெடுக்கவேண்டியதன் தேவையை, அவசியத்தைத்தான் குறித்து நிற்கிறது என்பதையும்,

அமைதி முயற்சிகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுள்ளபோதும் - தன்மானத்துடனும், விழிப்புடனும், துணிவுடனும், பலத்துடனும்தான், விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளில் இறங்கியிருக்கின்றனர் என்பதையும், சர்வதேசமும், இலங்கை அரசாங்கமும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு கவனத்திற் கொள்ளுமிடத்தே, அதனடிப்படையில்தான் - இலங்கைத் தீவின் எதிர்காலமும் தங்கியுள்ளது.

# அடிக்கிற காற்றை எதிர்த்துத்தான் இன்னும் அதிகம் உயரும் பட்டம்!

*பலஸ்தீனப் புதிய பிரதமர் அபாஸ் அறிவது!*

பலஸ்தீன விடுதலைப் பாடலான 'ஓ மரணித்த வீரனே உன் சீருடைகளை எனக்குத்தா' என்ற பாடல், தமிழ்மொழியில் மட்டுமல்ல உலகெங்கும் - எங்கெங்கு விடுதலை உணர்வு பிரவாகிக்கின்றதோ, அங்கெல்லாம் மொழிபெயர்க்கப்பட்டது. உலகின் பல விடுதலைப் போராட்ட சக்திகளுக்கு உந்து சக்தியாக விளங்கியது உங்கள் நாட்டுப் போராட்டம்தான் என்றால் அது மிகையாகாது.

உலக விடுதலை அமைப்புக்கள், தங்கள் மக்களின் சுதந்திரத்திற்காகவும், விடுதலைக்காகவும் உங்களிடம் தமது போராளிகளை அனுப்பிப் பயிற்சி பெற்ற காலம் போய் - இன்று நீங்களும், அரபாத்தும் உங்கள் பாதுகாப்பு, சுதந்திரம் என்பவற்றை இஸ்ரேல் படைகளிடம் ஒப்படைத்துவிட்டு, வீட்டுக் காவலில் இருப்பதுபோல் இருக்கின்றீர்கள்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா காலத்தில் நடத்தப்பட்ட அணிசேரா சர்வதேச மாநாட்டுக்கு யசீர் அரபாத் இலங்கைக்கு வந்ததும், அவரின் கம்பீரமான நடையை நாம் பார்த்துப் பிரமித்ததும், அங்கு அவர் எங்கள் தமிழ்மக்களுக்காகக் குரல் கொடுத்ததும் நாம் மறக்கவில்லை. எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கின்றது. உங்கள் நாட்டுப் போராட்டத்திற்காக - எங்கள் தமிழீழத்தில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் - எனது சிறிய வயதில் சுலோகத்தை ஏந்தி நான் பங்கேற்றிருக்கின்றேன்.

இரு தசாப்தங்களுக்கு முன்பே அமெரிக்கா உங்களை எதிர்த்தபோதும் - ரஷ்யா, இந்தியா, இலங்கை உட்பட பல நாடுகள் உங்களையும், உங்கள் அமைப்பையும் அங்கீகரித்திருந்தன. அத்தோடு, நேரடியாக நிதியுதவி மற்றும் ஆயுத



யசீர் அரபாத்

உதவிகளையும் செய்தன. ஆனால், விடுதலைப் புலிகளை இன்னும் தடைசெய்த நாடுகள் இருக்கின்றனவே தவிர, அவர்களுக்கு நேரடியாக உதவும் நாடுகள் என்று எதுவும் இல்லை. உலகில் எந்தவொரு நாட்டின் உதவியும் இல்லாமல் முன்னிலைக்கு வந்த ஒரேயொரு விடுதலை அமைப்பு புலிகள்தான் என்றால் அது மிகையாகாது. நான் நினைக்கிறேன் அப்படி பல நாடுகளும் எதிர்த்ததால்தான் அவர்கள் இவ்வளவு தூரம் முன்னேற முடிந்ததோ என்று. ஏனென்றால் 'அடிக்கின்ற காற்றை எதிர்த்துத்தான் அதிகம் உயரும் பட்டம்.'

உங்கள் விடுதலைப் போராட்ட அனுபவத்தின் வாயிலாக நாம் நிறையவே பாடங்களைப் படித்துக்கொண்டோம். ஆனால், இப்போது நீங்கள் - எங்கள் அனுபவத்தின் வாயிலாக நிறையப் படிக்கவேண்டியுள்ளது.

நீங்கள் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கைக்கும் காரணம் நோர்வேதான். அந்த உடன்படிக்கை தோல்வியில் முடிந்ததும் 'நோர்வேயையும், அமெரிக்காவையும் நம்பி நான் மோசம் போனேனே என்று அரபாத் அழுது 'புலம்பியதும்' நாம் அறிவோம்.

உங்கள் அந்த அனுபவத்தின் வாயிலாக நாம் நிறையவே பாடங்களைப் படித்துக்கொண்டோம்...

ஏற்கனவே அரபாத்திற்கு எழுதிய கடிதம் ஒன்றில் - உங்களின் விடுதலைத் தோல்விக்குக் காரணம் என்னவென்பதை விளங்கப்படுத்தியிருந்தேன். உலக நாடுகள் அரசியல் ரீதியில் உங்களை அங்கீகரித்தபோதும், இராணுவ ரீதியில் உங்களை நீங்கள் பலப்படுத்தவில்லை. ஆனால், விடுதலைப் புலிகள் உலக நாடுகளின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது தம்மை இராணுவரீதியில் பலப்படுத்திக்கொண்டனர். இப்போது அந்தப் பலத்திற்காக அவர்களை அரசியல் ரீதியில் அங்கீகரிக்க முன்வருகின்றனர். அங்கேயும் சிக்கல்தான்...

இப்போது அவர்களை அரசியல் ரீதியில் தனிமைப்படுத்த முயற்சிகள் நடக்கின்றன. வொஷிங்ரன் மாநாடு முதல் முயற்சி... அதுவே இறுதி முயற்சியாக - அதனை புலிகள் முளையிலேயே கிள்ளிவிட்டனர்...

ஆனால், அரபாத்தைத் தனிமைப்படுத்துவது மட்டுமல்ல, ஓரம் கட்டவும், தூக்கியெறியவும் முனைந்ததன் விளைவுதான் அப்பாஸ் என்கிற உங்கள் பிரதமர் நியமனமும், உங்களுக்கு வெள்ளை மாளிகை அழைப்பும். அத்துடன், ஒரு சமாதானப் பாதை என்ற தீர்வுப்பொதியும். இது சமாதானத்திற்கான பாதையோ அல்லது உங்கள் மக்களின் சமாதி மேட்டுக்கான பாதையோ என்பதைப் போகப்போகத்தான் தெரியும். அது உங்கள் கெட்டித்தனத்தில்தான் உள்ளது.

ஆரம்பத்திலேயே உங்களுக்குச் சிக்கல்... உங்கள் நாட்டிலுள்ள மற்றைய குழுக்கள் வன்முறைகளை கைவிட்டாலே ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவேன் என்கிறது இஸ்ரேல். இனி இதை அமெரிக்காவும் வழிமொழியும்...

நாங்களும் உங்களை மாதிரித்தான் இன்னொருவரால் ஆக்கிரமிக்கப்பட்டோம். அதுவும் இஸ்ரேல் முன்னாள் அதிபரின் - ஆயிரம் படையினரை ஒரு இடத்தில் நிறுத்தி வைப்பதைவிட, பத்துக் குடும்பங்களை அந்த இடத்தில் குடியேற்றுவது பலமானது என்ற கூற்றுப்படித்தான் இலங்கை அரசாங்கங்களும் செயற்பட்டு வந்தன. எங்கள் வீட்டுக்குள் வந்திருந்தவர்களை நாங்கள் விரட்ட வெளிக்கிட - எங்களை வன்முறையாளர்கள், பயங்கரவாதிகள் என்றனர். பின்னர் வன்முறையைக் கைவிடுங்கள் அங்கீகரிக்கிறோம் என்றனர். அதனைக்



தமிழீழ தேசியத் தலைவர்

கைவிட்டாலும், அவர்களின் தொந்தரவுகள் வேறு வடிவில் வருகின்றன.

நல்லவேளை, இங்கு உங்கள் நாட்டைப்போல் வேறு குழுக்களின் வன்முறைகள் இல்லை. இதற்குத்தான் எங்கள் நாட்டில் வேறு பல அமைப்புகளை இல்லாமல் செய்தார்கள் புலிகள்.

இருந்தபோதும் அமெரிக்கா - அரபாத்தை ஓரங்கட்டிவிட்டு உங்களைத் தெரிவுசெய்ததுபோல், இலங்கையில் ஆனந்தசங்கரியையும் இன்னும் சிலரையும் சில நாடுகள் இங்கு தெரிவு

## ஒரு பகிரங்கக் கடிதம்

செய்யத்தான் செய்கின்றன.

இப்பொழுது, விடுதலைப் புலிகள் வன்முறையைக் கைவிட்டதும் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? ஐயோ தமிழ்ச் சிறார்களைப் பிடித்துக்கொண்டு போகின்றார்கள், தமிழ் மக்களிடம் வரி வசூலிக்கின்றார்கள் என்று எங்களுக்காக அனுதாபப்படுகின்றனர்.

உங்கள் பகுதி சிறார்கள் கொல்லப்பட்டபோதும், அவர்கள் தங்கள் பாடசாலைகளில் படிக்க முடியாதபடி அகதி முகாம்களில் உள்ளபோதும், அதனையிட்டு கவலைப்படாதவர்கள், ஏன் கடந்த வாரம் மனித உரிமை அமைப்புக்கூட இஸ்ரேல் சிறைகளில் 300 இற்கும் மேற்பட்ட சிறார்கள் உள்ளனர் என்று தெரிவித்துள்ளநிலையில், அதனையிட்டுக் கவலைப்படாதவர்கள் எல்லாம் இனிமேல் கவலைப்படுவார்கள்.

இதேபோல் உங்களுக்கும் நடக்கும். 'ஐயோ பலஸ்தீனச்



பலஸ்தீன புதிய பிரதமர் அபாஸ்

சிறார்களைப் பிடிக்கின்றார்கள். அவர்களைப் படையில் சேர்க்கின்றார்கள். பலஸ்தீன மக்களிடம் வரி வசூலிக்கின்றார்கள் என்று பலஸ்தீனியர்களின் மீது இஸ்ரேலியர்களும், அமெரிக்கர்களும் அனுதாபம் செலுத்துவார்கள். பி.பி.சி கூட அதற்குச் சான்றாகப் பல பெட்டக நிகழ்ச்சிகளைச் செய்யும். பலஸ்தீனியர்கள் தவிர் மற்றெல்லாரிட்மும் பேட்டி காணும்.

வரி வசூலிப்பதையும், சிறார்களைப் படையில் சேர்ப்பதையும் நீங்கள் கைவிட்டதன் பின்னரே, உங்களை அங்கீகரிப்பதென்றும், யூதப்படைகள் அமைத்துள்ள உயர்பாதுகாப்பு வலயங்களை விட்டு விலகுவார்கள் என்றும் அமெரிக்காவும், இஸ்ரேலும் நிபந்தனை விதிப்பார்கள். ஆட்டுக்குட்டியின் மீது ஓநாய்கள் அக்கறை கொள்ளும். நீங்களே பின்னர் அமெரிக்காவின் கண்ணுக்குப் பயங்கரவாதியாக்கப்படுவீர்கள்.. இப்போது உங்களை வெள்ளைமாளிகைக்கு அழைத்துள்ளனர்.

ஒரு விடயத்தை மறந்துவிடாதீர்கள். நெல்சன் மண்டேலாவையும், அரபாத்தையும் பயங்கரவாதிகள் என்றுகூறி, வெள்ளை மாளிகையில் உட்புகவிடவில்லை. பின்னர் வரவேற்றனர். ஆனால், உங்களை எடுத்த எடுப்பிலேயே நல்ல மனிதர் என்று கூறி - பின்லேடனை வரவேற்றதுபோல் வெள்ளை மாளிகைக்கு வரவேற்கின்றனர். பின்னாளில் பின்லேடனின் நிலை உங்களுக்கு வாராமல் பார்த்துக்கொள்ளுங்கள்...

முன்னர் உங்கள் அனுபவத்தின் வாயிலாக நாம் நிறையவே பாடங்களைப் படித்துக்கொண்டோம். ஆனால், இப்போது நீங்கள் - எங்கள் அனுபவத்தின் வாயிலாக நிறையப் படிக்கவேண்டியுள்ளது. நாங்கள் முன்னர் எங்களில் பலரை உங்களிடம் பயிற்சிக்கு அனுப்பியதுபோல், நீங்கள் இப்போது...

வேண்டாம்... இதெல்லாம் வெளிப்படையாய் சொல்லமுடியாது... உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன்..


புரிந்தால் சரி...

கனடாவிலிருந்து
வாசகன் இரட்ணதுரை

# அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின்பவலின் சூறாவளிச் சுற்றுப்பயணத்தின் உள்நோக்கம் யாது?

சவூதி அரேபியாவிலும், செச்னியாவிலும் தற்கொலைத் தாக்குதல்கள். காஸாவிலும் அதேதாக்குதலும், அதற்குப் பதிலடியாக இஸ்ரேலிய இராணுவத்தின் இராணுவ நடவடிக்கையும் கடந்தவார சர்வதேச அரசியலின் முனைப்பான செய்திகளாகும்.

அதைவிட சுவாரசியமான இன்னோர் செய்தியாக - அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் மேற்கொண்டிருக்கும் சுற்றுப் பயணம் விளங்குகின்றது. அவர் எங்கு சென்றாலும் அங்கெல்லாம் குண்டுச்சத்தம் கேட்டவண்ணம் உள்ளது. அவரது விஜயமும், அதில் மறைந்துள்ள அரசியல் உள்நோக்கத்தினையும் இவ்வாரம் பரிசீலிப்போம்.



சவூதிக்கு கிடைத்த அதிர்ச்சி.

### மேற்காசிய விஜயம்

கொலின் பவல் மேற்காசியா பக்கம் ஒரு சூறாவளி விஜயத்தினை மேற்கொண்டிருந்தார். அவர் அப்பிரதேசத்தில் மிகநீண்ட காலமாக நிகழ்ந்துவரும் பலஸ்தீன - இஸ்ரேல் பிணக்கைத் தீர்ப்பதற்கான திட்டமிடலைக் கொணடிருப்பவர் போன்று தன்னையும், அமெரிக்காவையும் காட்டிக்கொண்டார்.

அவர்களுக்குச் சலாம்போடும் பலஸ்தீனப் பிரதமர் என எதிர்பார்க்கும் முகமட் அப்பாஸை சந்தித்ததும், பின்னர் இஸ்ரேலியப் பிரதமருக்கும் அவரது சகாக்களுக்கும் சமாதானம் பற்றி எடுத்துக்கூறியதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மேலும் அவர் அங்கு பேசும்போது - 2005 இல் பலஸ்தீன தனிநாட்டுக்கான வழிமுறை தாம் முன்வைக்கும் சமாதானத் திட்டத்தில் உண்டு எனக் கூறினார். அவ்வாறு கொலின் பவல் கூறுவது அவருக்குப் புதிதாக இருக்கலாம். ஆனால், உலகத்திற்கும், பலஸ்தீன மக்களுக்கும் பழைய கதையாகவே உள்ளது.

இதைப்போன்று பல தடவை அமெரிக்க ஆட்சியாளர்கள் காகிதங்களில் பலஸ்தீன மக்களுக்குத் தனி நாடு கொடுத்தவர்கள். 1993 இல் செய்யப்பட்ட காஸா - ஜெரிக்கோ உடன்படிக்கையின்படியும் 2003 இல் தனிநாடாக பாலஸ்தீனம் அமையும் என்றார்கள்.

ஏன் 1948 இல் செய்யப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானப்படி - பலஸ்தீனமும், இஸ்ரேலும் இரண்டு நாடுகளாகவே பாகப்பிரிவினைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

1997 இல் முன்னர் ஜனாதிபதியாக இருந்த கிளின்டன் - பலஸ்தீனர்களின் சுயநிர்ணயக் கோரிக்கையை அனுமதிப்பதாகவும், அவர்களது போராட்டத்தினை ஆதரிப்பதாகவும் பலஸ்தீனத்துக்கு விஜயம் செய்தபோது கூறினார். ஈராக் மீதான இரண்டாவது போர் தீவிரமடைந்தபோது, வில்லியம் புஷ் குறிப்பிட்டார் - பலஸ்தீன மக்களுக்கு, அவர்களது கோரிக்கைக்கு ஏற்ப சமாதானபூர்வமான தீர்வு அமெரிக்காவால் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று.

இவ்வாறு 1948 இலிருந்து 2003 வரை அமெரிக்க ஆட்சியாளர்கள் மாறிமாறி திட்டங்களையும், தீர்வுகளையும் வரைபில் வடித்து ஒப்பங்கள் மட்டும் இட்டுக்கொள்கிறார்கள். நடைமுறையில் எந்த மாற்றத்தினையும் பலஸ்தீன மக்களது இயல்பு நிலையில் ஏற்படுத்தவில்லை.

ஆனால - அமெரிக்கர்கள் காலத்துக்குக்காலம் பலஸ்தீன - இஸ்ரேலிய பிணக்கினை முன்வைத்துக் கொண்டு தமது இலக்கினையும், நலனையும் அடைய முயலுகின்றனர். அந்த வரிசையில் கொலின் பவலின் மேற்காசிய விஜயமும் அவ்வாறான தொன்றே எனக் கூறலாம்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக சவூதி அரேபியக் குண்டுவெடிப்பு - பவலை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும். எப்படி காஸா பகுதியில் இஸ்ரேலியத் தாக்குதல் இருந்ததோ, அதைவிடவும் மேலான தாக்கம் தருவதாக சவூதி குண்டுவெடிப்பு அமைந்திருக்கும்.

குறிப்பாக, சவூதி அரேபியத் தாக்குதலில், வெளிநாட்டவர் வசித்து வந்த மூன்று குடியிருப்புக்களை இலக்கு வைத்திருந்ததுடன், அல்மிகார் குடியிருப்பு முற்றாகவும் அழிக்கப்பட்டது. கொல்லப்பட்டவர்களில் பத்துப் பேர் அமெரிக்கர் என்பதும், காயப்பட்டவர்களில் 40 பேர் அமெரிக்கர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது பவல் வருகைதர முன்பு நிகழ்ந்தது என்பதுடன், இஸ்லாமியத தீவிரவாதிகள் எத்தகைய உணர்வைக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் விளங்கிக்கொள்ளப் போதுமானது.

கட்டாரை முதன்மைப்படுத்தும் அமெரிக்கா - சவூதி அரேபியாவிலிருந்து தனது படைகளை வெளியேற்ற இணங்கியிருப்பது, ஆட்சியாளரை தாஜா பண்ணும் அரசியல் வாக்குறுதியாகும். அண்மையில் கட்டாரை மையப்படுத்திய தாக்குதல் திட்டத்தில் வெற்றிகண்ட அமெரிக்கா - சவூதி அரேபியாவிலிருந்து படைகளை வெளியேறறும் என்று உடனடியாக நம்பிவிடமுடியாது.

அமெரிக்காவுக்குத் தற்போது எழுந்துள்ள பிரதானமான இன்னுமொரு பிரச்சினை - ஈராக்கின் எண்ணெய் வளததினை எப்படிச் சுரண்டுவது என்பதாகும். எண்ணெய்வள நாடுகளின் அமைப்பான 'ஒபெக்'கில் ஈராக்குக்குப் பதிலாக அமெரிக்காவைச் சிபார்சு செய்யும் நடவடிக்கை இப்போது சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது.

இதனைக் கட்டார் நிர்வாகத்துடன் உரையாடும்போது, கொலின் பவல் கோரியுள்ளார் என்பதும் கவனிக்கத்தக்கது. இரண்டாவது விடயம் - ஈராக் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை அகற்றுவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்வதென்பதாகும்.

இவ்விரண்டு கோரிக்கைகளையும் அடைவதற்கே பவல், சூறாவளிச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

ஆனால் - அவரது விஜயத்தின் இரண்டு அம்சங்களும் நெருக்கடிக்குள் அகப்பட்டுள்ள. அதனைச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

### பவலின் ரஷ்ய விஜயம்

பவல் மேற்காசியா புறப்பட முன்பு - ரிச்சட் ஆர்மிரேஜ்ஜும், கிறிஸ ரினா ரொக்காவும் தெற்காசியாவுக்கு வருகை தந்தனர். அவர்கள் இருவரது விஜயத்திலும் இரண்டு விடயங்கள் முதன்மைபெற்றிருந்தன.

ஒன்று, இந்திய - பாகிஸ்தான் விடயம். அது ஆர்மிரேஜ்ஜுடன் நிறையத் தொடர்புபட்டது. அதிலும் கணிசமான நெருக்கடியே அவரது விஜயத்தின்போது கிடைத்தது. அது பற்றிக் கடந்தவாரம் இதேபகுதியில் பார்த்தோம். இந்தியா - பாகிஸ்தான் சமாதானப் பேச்சுக்களைக் குழப்புவதில் ஆர்மிரேஜ் வெற்றிகண்டு விட்டார். பாகிஸ்தான் தற்காலிகப் பாதுகாப்புச்சபை உறுப்பினர் என்பதைக் கருத்தில்கொள்ளும் அமெரிக்கா - பாகிஸ்தான் பக்கம் சாயவே அதிகம் விரும்புகின்றது.

ஆனால், இந்தியாவைப் பயன்படுத்திச் சீனாவை, ரஷ்யாவை கையாள விரும்புகின்ற அமெரிக்காவுக்கு - வாஜ்பாய் அரசு தகுந்த பதில் வழங்கியுள்ளது.

இரண்டாவது அம்சம் - இலங்கை இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தை நின்றுபோனதைத் தொடர்வதற்கான அணுகுமுறையை ரொக்கா கையாள முனைந்ததுடன், ரணில் விக்கிரமசிங்கவின் கரத்தினைப் பலப்படுத்த முயன்றதையும் உணரமுடிகின்றது. பேச்சுவார்த்தையில் புலிகள் கலந்துகொள்ள வலியுறுத்துவதும், சந்திரிகாவின் அதிகாரத்தினைக் கட்டுப்

**கே.ரீ.கணேசலிங்கம்**

படுத்த முனைவதும் ரொக்காவால் தற்போதைக்குச் சாதிக்கமுடியாமல் போனதுடன், ரோக்கியோ மாநாட்டில் இந்தியாவைப் பங்கெடுக்கவைப்பதில் அதிகம் சிரத்தை கொள்ளப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே, பவலுக்கு அதிகபடியாக ரஷ்யாவை சமாதானப்படுத்துவது பிரதான பணியாக அமைந்தது. அங்கு பவலுக்கு - புட்டின் மீண்டுமொரு உடன்படிக்கையை நீட்டினாா. அணுவாயுதக் குறைப்புத் தொடர்பான மொஸ்கோ உடன்படிக்கை ஒன்றினை அமெரிக்காவோடு செய்துகொண்டார். அது மட்டுமல்ல - இந்திய வெளிவிவகார அமைச்சரும், கட்டார் நாட்டுப் பிரதி வெளிவிவகார அமைச்சரும் மொஸ்கோவில் பவலைச் சந்தித்தனர்.



ஜோர்ஜ் புஷ்ஷுடன் கொலின் பவல்

ஆனால் - நடந்தது என்ன? இந்தியா - இன்னமும் தனது அமெரிக்கா குறித்த நிலைப்பாட்டில் பெரிய மாற்றத்தைச் செய்யவில்லை என்பதுடன் - இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா சொல்வதனைப் பவல் ஏற்றுக்கொள்ளும் நிலைக்கும் பவல் தள்ளப்பட்டிருந்தார்.

இதேகாலப் பகுதியில் - பாகிஸ்தானின் நிபந்தனையற்ற பேச்சுக்கான அழைப்பினையும் வாஜ்பாய் நிராகரித்துவிட்டார். அதேவேளை - ரஷ்யாவுடனான இராணுவ, கடற்படை ஒத்திகைக்கும் தயாராவதாக இந்தியா அறிவித்திருக்கிறது.

கட்டார் நாட்டு பிரதி வெளிநாட்டு அமைச்சர், 'ஒபெக்'கில் - ஈராக்குக்குப் பதிலாக அமெரிக்காவைச் சிபார்சு செய்யமுடியாது எனத் திட்டவட்டமாக மொஸ்கோவில் வைத்து அறிவித்தார். ஈராக் அரசியல் பற்றிய விடயம் 'ஒபெக்'கில் எடுத்துக்கொள்ளப்படும் என்றும், விரைவில் ஈராக்கில் சுதந்திரமான அரசொன்று உருவாவதனை ஒபெக் விரும்புகிறது என்றும் குறிப்பிட்டார்.

எனவே, இவற்றை வைத்துப் பார்க்கும்போது - பவலின் விஜயம் தோல்வியடைந்துள்ளதையே உணரலாம். ரஷ்யாவைப் பொறுத்தவரை அது, அமெரிக்க - பிரிட்டன் கூட்டு நகலான ஈராக்கினை மீளக்கட்டி எழுப்புவது தொடர்பாகவும், அதன் பொருளாதாரத் தடையை நீக்குவது தொடர்பாகவும் கொண்டுள்ள ஏகபோகத் தன்மையை நிராகரிப்பதுடன், ஐ.நாவின் பங்கினையும் வலியுறுத்துகின்றது.

அதனைப் பவலுக்குத் தெரிவித்த புட்டின், பயங்கரவாதம் தொடர்பான நடவடிக்கையில் ரஷ்யாவின் பங்கினையும் வெளிப்படுத்தினாா். போரைத தணிக்க மேற்கொண்டதுபோல், பொருளாதாரததில் சாதிகக முடியாது என்பதனை அமெரிக்கர்கள் உணர வேண்டிய கட்டம் வரும்போல் தெரிகிறது. ♦

---

## வசதிகளின்றி இயங்கும் உடுவில் பொது நூலகம்

(உடுவில்)

வலி.தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட உடுவில் உப அலுவலகத்தில் இயங்கும் நூலகத்தில் பத்திரிகை படிப்பதற்கான பகுதி, கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக ஒரு மூலையிலேயே இயங்கி வருகிறது.

நாளாந்தம் சுமார் ஐநூறு வாசகர்கள் இந்த நூலகத்தில் பத்திரிகை படிக்க வருகின்றபோதும்- போதிய வெளிச்சமோ, காற்றோட்ட வசதியோ, தளபாட வசதியோ அற்ற இடத்திலேயே இப்பகுதி இயங்கி வருகிறது.

இக்குறைபாடு பற்றி, வாசகர்கள் தரப்பில் பலமுறை முறையிடப்பட்ட போதிலும், நிர்வாகத்தினர் அசமந்தப்போக்கில் இருப்பதாக வாசகர் ஒருவர் தெரிவித்தார். மழை நேரத்திலும், மின்சாரம் தடைப்படுகின்ற போதும் பத்திரிகை படிக்க முடியாது தாம் சிரமப்படுவதாக வாசகர்கள் மேலும் தெரிவித்தனர்.

---

## சட்டவிரோத மின்சாரம் பெறுவோர் அதிகரிப்பு

பருத்தித்துறை, சற்கோட்டைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுவோர் தொகை அதிகரித்துள்ளது.

இரவுவேளைகளில் மட்டுமல்லாது, பகலிலும் இப்பகுதியில் பலர் சட்டவிரோத மின்சாரத்தைப் பெற்று வருகின்றார்கள். (சு)

---

## காலையில் வெளியேறிய ராணுவம் மீண்டும் மாலையில் குடிவந்தது!

'குமுதினிப் படகுப் படுகொலை' நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவாலயப் பகுதியில் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் மற்றும் பொலிஸார் - குமுதினிப் படுகொலை 18 ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் இடம் பெற்ற தினத்தன்று - காலைமுதல் அப்பகுதியிலிருந்து வெளியேறி, வேறோர் இடத்தில் தங்கியிருந்தனர். இதனால், நெடுந்தீவு மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

ஆனால், அந்தச் சந்தோஷத்தைச சிதறடிக்கும் வகையில், நினைவு நாள் நிகழ்வுகள் நிறைவடைந்து அரை மணிநேரத்திற்குள் மீண்டும் அப்பகுதியில் படையினரும், பொலிஸாரும் மீள நிலைகொண்டுள்ளனர்.

---

## சந்திர மௌலீச வித்தியாலயத்தில் சுழற்சிமுறையில் சிரமதானம்!

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் வடக்கு, சந்திர மௌலீச வித்தியாசாலையில் சுழற்சி முறையில் பெற்றோர்களால் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பாடசாலை வளவில் வளர்ந்துள்ள புல், பூண்டுகள் அகற்றப்பட்டு, பாடசாலை வளாகத்தில் மாணவர்கள் இடையூறின்றிச் செல்லத்தக்க வகையில் துப்பரவு செய்யப்படுகின்றது.

மேற்படி பாடசாலையில் தற்போது சுமார் 300 மாணவர்கள் வரையில் கல்வி கற்கின்றனர். இவர்களின் பெற்றோர்கள் நாளாந்தம் 50 பேர் வரையில் சிரமதானப் பணியில் ஈடுபட்டு வருவதாகப் பாடசாலை அதிபர் செ.சிவஞானம் தெரிவித்தார்.

இதேவேளை, 2000 ஆம் ஆண்டு யுத்தத்தின்போது சேதமடைந்த பாடசாலையின் வகுப்பறைகள், அதிபர் அலுவலகம் என்பன கல்வித் திணைக்களத்தாலும், ஜி.ரி.இசற்றினாலும் சுமார் 10 இலட்சம் ரூபா செலவில் திருத்தப்பட்டு வருகின்றன.

இந்தத் திருத்த வேலைகள் யாவும், முடிவுறும் நிலையிலுள்ளன.

ஆண்டு 11 வரை வகுப்புகள் நடைபெறும் இப்பாடசாலையில் - மனையியற்கூடமொன்றையும், வாகனத் தரிப்பிடத்தையும் அமைப்பதற்கான முன்முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருவதாக அதிபர் மேலும் தெரிவித்தார். (24)

# சதாம் ஆதரவாளர் திக்ரிட் நகரில் கைது!



(பக்தாத்)

ஈராக்கின் வடக்கு நகரான திக்ரிட்டில், அமெரிக்கப் படைகள் நடத்திய திடீர் சுற்றி வளைப்பில் - சதாமின் பாத் கட்சியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் ஒருவரை கைது செய்துள்ளதாக, அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். கைதானவர் குறித்த விபரங்களை வெளியிட அதிகாரிகள் மறுத்தபோதிலும், உள்ளூர்வாசிகளின் தகவல்களின்படி கைதானவர் அப்ட்-அல்-பாக் சாடுன் என்ற பாத் கட்சிப் பிரமுகர் எனத் தெரிய வருகிறது. இவர், 55 பேர் அடங்கிய அமெரிக்காவின் தேடுதல் பட்டியலில், 22 ஆவது நபராக உள்ளவராவார். இவருடன் மேலும் சிலரும் இந்தச் சுற்றிவளைப்பில் கைதாகியுள்ளனர்.

திக்ரிட் நகர், சதாமின் சொந்த இடம் என்பது குறிப்பிடத்தக்கது.

# பஞ்சாப் ரயில் விபத்தில் இறந்தோரை அடையாளம் காணும் பணி தொடர்கிறது!

(புதுடெல்கி)

பஞ்சாப்பில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ரயில் அனர்த்தத்தில், கருகி மாண்ட பயணிகளை அடையாளங்காணும் பணி தொடர்ந்து நடைபெறுகின்றது.

"பொற்கோயில் கடுகதி" என அழைக்கப்படும் இந்த ரயில் வண்டியில், தீ ஏற்படக் காரணம் என்ன என்பது குறித்த விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

கொல்லப்பட்ட 38 பயணிகளில் 17 பேர் மட்டுமே அடையாளங் காணப்பட்டுள்ளனர். ஏனையோரின் சடலங்கள் மோசமாகத் தீயில் கருகியுள்ளதால், அவர்களது உறவினர்களால் இச்சடலங்களை அடையாளம் காண



முடியாத நிலை காணப்படுகின்றது.

அடையாளம் காணமுடியாத சடலங்களை, ஒன்றுசேர்த்து தகனஞ் செய்ய திட்டமிடப்பட்டுள்ள போதிலும், உறவினர்களுக்காக சில தினங்கள் இம்முயற்சியைப் பிற்போட அதிகாரிகள் சம்மதித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்த விசாரணைகளை ஒரு மாதத்திற்குள் பூர்த்தி செய்ய வேண்டுமென மத்திய ரயில்வே அமைச்சர் நிதீஷ் குமார் உத்தரவிட்டுள்ளார்.

பூர்வாங்க விசாரணைகளில், ரயிலினுள் இருந்த மண்ணெண்ணை அடுப்பு ஒன்று வெடித்தமையாலேயே தீ பரவி, பயணிகள் பெட்டிக்கும் பரவியதாகத் தெரியவந்துள்ளது. எனினும், தீ எவ்வாறு விரைவாகப் பரவியது என்பது குறித்து இன்னும் தெளிவாகவில்லை.

ரயில் சாரதி - சாதுரியமாக எரிகின்ற பயணிகள் பெட்டியை துண்டித்துவிட்டதால் - தீ, ஏனைய ரயில் பெட்டிகளுக்கும் பரவி, பெரும் அனர்த்தம் ஏற்படாமல் தடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

## டைட்டானிக் கண்காட்சி!

மூழ்கிய டைட்டானிக் கப்பலில் இருந்து மீட்கப்பட்ட ஆடம்பரப் பொருட்கள், கப்பலின் பகுதிகள் என்பனவற்றின் கண்காட்சி, நேற்று லண்டன் விஞ்ஞான அருங்காட்சியகத்தில் ஆரம்பமானது. கப்பலின் பிரபலமான அபாயமணி, இறந்த பயணிகளின் உடமைகள், அழகிய மட்பாண்டங்கள் என்பவற்றுடன் கப்பலின் இரண்டாம் வகுப்பு, மூன்றாம் வகுப்புக்களின் மாதிரித் தோற்றங்கள் என்பனவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

உலகவலம்

# ஐரோப்பிய யூனியன் தலைவர் தேர்தலில் தெரிவாகலாம்!



ஐரோப்பிய யூனியன் தலைவர்கள்

ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பிரஜைகள், ஐரோப்பிய யூனியனுக்கான தலைவரை தேர்தல் வாக்களிப்பு மூலம் நேரடியாகத் தெரிவுசெய்யும் உரிமையை வழங்குவது குறித்து ஆராயப்படுகிறது.

ஐரோப்பிய யூனியனுக்கான, சர்ச்சைக்குரிய அரசியல் யாப்பை வரைவது குறித்த பிரசஸல்ஸ் பேச்சுக்களில் இவ்விடயம் முன்வைக்கப்படவுள்ளது. ஆனால், இந்தத் திட்டத்தை பிரிட்டன் எதிர்த்துள்ளது.

ஐரோப்பாவைச் சேர்ந்த சுமார் 100 அரசியல்வாதிகள் ஐரோப்பிய யூனியனுக்கான சட்டவரைபை வரைவதில் ஈடுபட்டுள்ளனர்.

# வெற்று மார்பினால் சுவாஸியில் சர்ச்சை!



தென்பகுதி ஆபிரிக்க நாடான சுவாஸியில், பெண்கள் தமது தேசிய உடையில் மார்பை மறைக்காத தன்மைக்கான உரிமையை தொடர்ந்து பேணவேண்டும் என்பதை சுவாஸி அரசியல்வாதிகள் ஏற்றுள்ளனர்.

சுவாஸிக்கு மத விஜயமாக வந்த நைஜீரியாவின் கிறிஸ்தவ மதகுரு ஒருவர், பெண்கள் இவ்வாறு மார்பை மறைக்காத நிலையினால் தான் எயிட்ஸ் நோய் தீவிரமாக பரவுவதாக குற்றஞ்சாட்டியிருந்தார். அவரின் கருத்தினால் ஆத்திரமடைந்த சுவாஸி அரசியல்வாதிகள், பெண்கள் மார்பை மறைக்காது உடையணிவது, சுவாஸி தேசிய பாரம்பரியம் எனக் கூறியுள்ளனர்.

நைஜீரிய மதகுருவின் தகவலின்படி - சுவாஸி நாட்டின் விமான நிலையத்தில் பயணிகளை வரவேற்கும் விளம்பரப் பலகையில்கூட, வெற்று மார்புடன் சுவாஸிப் பெண்ணின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. வெற்று மார்புகளை காட்டுவதைவிட சுவாஸி நாட்டில் காட்டுவதற்கு எத்தனையோ இருக்கிறதே என விசனப்பட்டுள்ளார்.

தற்போது இவ்விவகாரம் சுவாஸி நாடாளுமன்றத்தில் பூதாகரமாக வெடித்துள்ளது.

# இந்தோனேஷிய – 'ஆக்' மாகாண சமாதான பேச்சு முறியும் நிலை!



இந்தோனேஷியாவின் 'ஆக்' மாகாணத்தில், இந்தோனேஷியப் படையினரால் 5 'ஆக்' விடுதலை இயக்க உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள், போராளி அமைப்பின் சமரசப் பேச்சாளர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தமது சமரசப் பேச்சாளர் குழுவை விடுவிக்காவிட்டால், ரோக்கியோவில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுக்களை பகிஷ்கரிக்கப்போவதாக சுதந்திர 'ஆக்' இயக்கம் அறிவித்துள்ளது.

'ஆக்' மாகாணத்தின் தலைநகரில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த ஐவரையும் கைதுசெய்த இந்தோனேஷியப் படையினர், அருகிலுள்ள பொலிஸ் நிலையமொன்றில் இவர்களை விசாரணைக்காக ஒப்படைத்துள்ளனர்.

எனினும், இவர்கள் அதிகாரிகளுக்கு அறிவிகாது மாகாணத்தை விட்டு வெளியேற முயற்சித்ததாலேயே கைதானதாக, இந்தோனேஷியப் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கடந்த டிசெம்பரில், இந்தோனேஷிய அரசுக்கும் 'ஆக்' போராளிகளுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தானது. தொடந்து-ரோக்கியோவில் இருதரப்புக்கும் இடையே சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றுவருகின்றன.

எனினும், அண்மைக்காலமாக கள நிலைவரத்தில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலைமையினால், சமாதானப் பேச்சுக்கள் முறிவடையும் நிலை காணப்படுகிறது. 'ஆக்' மாகாணத்துக்கு தற்போது ஆயிரக்கணக்கில் இந்தோனேஷியப் படையினர் அனுப்பப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் 'ஆக்' விடுதலை அமைப்பு தமது ஆயுதங்களைக் கைவிட்டு, தமது சுதந்திரப் பிரகடனத்தையும் கைவிட்டுவிடவேண்டும். அல்லது படைநடவடிக்கை தவிர்க்கமுடியாதது என இந்தோனேஷிய அரசு எச்சரித்துள்ளது.

# பிரான்ஸுக்கு எதிராக அமெரிக்கா தகவல் பிரசாரம் என குற்றச்சாட்டு

பிரான்ஸுக்கு எதிராக அமெரிக்கச் செய்தி நிறுவனங்கள் பழிசுமத்தி வருவதை ஆட்சேபித்து, அமெரிக்காவிற்கான பிரான்ஸ் தூதுவர்- அமெரிக்க கொங்கிரஸ் அரசுக்கு முறையீடு ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

இந்நடவடிக்கை நிறுத்தப்படுவதுடன் இத்தகவல்களுக்கு அமெரிக்க கொங்கிரஸ் முன்னுரிமை கொடுப்பதையும் கைவிடவேண்டும் என அவர் கேட்டுள்ளார். புஷ் நிர்வாகத்தால் திட்மிட்டே இத்தகவல்கள் செய்தி நிறுவனங்களுக்கு வழங்கப்படுவதாக பிரான்ஸ் கருதுகிறது. ஈராக் மீதான அமெரிக்க நடவடிக்கைக்கு, பிரான்ஸ் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளதால் இரு நாடுகளிடையே இராஜீக ரீதியில் கருத்துமுரண்பாடு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மெக்சிக்கோவிலிருந்து

# லொறிக்குள் அகதிகளை கடத்திய சாரதிக்கு எதிராக வழக்குப் பதிவு!



சடலம் ஒன்று அகற்றப்படுகின்றது

(மெக்சிக்கோ)

லொறியொன்றின் கொன்ரெயினருக்குள் சட்டவிரோதமாக அகதிகளை கூட்டிச்சென்றபோது - அவர்களில் ஐந்து வயதுச் சிறுவன் உட்பட 118 பேர் மூச்சடைப்பால் இறந்தமைக்காக, கறுப்பினச் சாரதி ஒருவருக்கு எதிராக ரெக்ஸாஸ் நீதிமன்றில் வழக்கு ஒன்று பதிவாகியுள்ளது.

ரிரோன் வில்லியம்ஸ் என்ற சாரதி - திட்டமிட்டு இவர்களை லொறிக்குள் அடைத்ததாலதான் மரணங்கள் ஏற்பட்டன எனக் கண்டறியப்பட்டால், மரணதண்டனை தீர்ப்புக் கிடைக்கும். எனினும், மனிதர்களை சட்டவிரோதமாக இவ்வாறு லொறிக்குள் அடைத்து, கடத்தி, அவர்களின் மரணத்துக்கும் காரணமாக இருந்த சாரதிக்கு ஆயுட்காலச் சிறை நிச்சயம் என ரெக்ஸாஸ் மாநில சட்ட அதிகாரி தெரிவித்தார்.



வில்லியம்ஸ்

ஜமாய்காவில் பிறந்து, தற்போது நியூயோர்க்கில் வசிக்கும் வில்லியம், இது குறித்து கருத்து தெரிவிக்கையில் - இந்த அகதிகளை மெக்சிக்கோ எல்லையூடாக லொறிக்குள் வைத்து கடத்திச் சென்றால் - 2,500 டொலர் தருவதாக முகவர் ஒருவர் கூறியதாலேயே தாம் இப்பணியைச் செய்ததாகக் கூறினார்.

அகதிகளை கடத்திச் சென்றபோது, தற்செயலாக லொறியின் பின்புற சமிக்ஞை விளக்கு உடைந்ததால்தான், லொறியை நிறுத்திவிட்டுப் பின்புறமாகச் சென்றதாகவும், அவ்வேளை லொறியின் கொன்ரெயினருக்குள் அலறும் ஒலியும் கேட்டதாகவும் தெரிவித்தார். கொன்ரெயினரைத் திறந்தபோது அதனுள் பலர் பட்டினியால் மயங்கியும், மூச்சடைப்பால் இறந்தும் காணப்பட்ட காட்சியைக் கண்டு தான் திடுக்குற்றதாகவும் கூறினார்.

இவர்களுக்கு நீரை வழங்கத் திட்டமிட்டபோதும், பின்னர் அச்சம் காரணமாக அகதிகள் இறந்த கொன்ரெயினரை அந்த இடத்தில் கழற்றி விட்டு, லொறியுடன் தப்பிச் சென்றுவிட்டதாகக் கூறினார்.

கொன்ரெயினரை தற்செயலாக மெக்சிக்கோ எல்லையிலிருந்து 370 கிலோமீற்றர் தொலைவில் பொலிஸார் கண்டனர். மெக்சிக்கோ அகதிகளே அதிகமாக இதில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



We believe the right people choose the right way
54A, Palaly road
Kantharmadam
கணனிக் கல்வியில் ஓர் உச்சாணி
STP
புதிய பிரிவுகள் ஆரம்பம் 25-05-03
T.P: 2222674 (சி-920)


# கல்வி மேம்பாட்டுப் பேரவை அலுவலகம் திறந்துவைப்பு




தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின், யாழ். மாவட்டப் பணிமனை, நேற்றுக் காலை 10 மணிக்கு யாழ். கல்வி வலயத்தில் திறந்து வைக்கப்பட்டது.

பேராசிரியர் சண்முகதாஸ் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் - ஈகச்சுடரினை, நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும், பொது அமைப் புக்களின் ஒன்றியத் தலைவர் பரமநாதனும், வட - கிழக்கு மாகாண தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் மகாசிவமும், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரனும், மேலதிக மாகாண கல்விப் பணிப் பாளர் திருமதி மகாலிங்கமும் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியினை, யாழ். மாவட்ட அரசி யற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணனும், தமிழீழ மாணவர் பேரவைக் கொடியை, முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளரும், ஜி.ரி.இசற் இணைப்பாளருமான கந்தசாமியும் ஏற்றிவைக்க, பெயர்ப் பலகையினை, வட - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் மகா லிங்கம் திரைநீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பணிமனையை, வட- கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் தியாக லிங்கம் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். (ரா,சு)

# மட்டு.அரசியல் அலுவலகம் மீது நேற்று கைக்குண்டு வீசப்பட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் தாமரைக்கேணி வீதியிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகத்தை நோக்கி, நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் கைக்குண்டு ஒன்று வீசப்பட்டது.

அலுவலகத்தின் முன்பாக-நுழைவாயிலின் பக்கம் இருந்து வீசப்பட்ட இக் கைக்குண்டு, கட்டடத்துக்கு அருகில் வீழ்ந்தபோதும் வெடிக்கவில்லை என அலுவலகப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

வீசப்பட்ட மேற்படி கைக்குண்டு படையினர் பயன்படுத்தும் ஜே.ஆர்.ரகக் குண்டு என்றும், முன்னைய ஆயுதக் குழு உறுப்பினரும், புலனாய்வுக் குழுவைச் சேர்ந்த ஒருவருமே, சம்வத்திற்கு முன்னர் அங்கு நடமாடி யாதகவும், தம்மால் அவர்களை அடையாளம் காட்ட முடியுமென்றும் அலுவலகப் பொறுப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# திருமலை சென்ற பஸ் விபத்து; தாயும் மகனும் ஸ்தலத்தில் பலி!

(திருகோணமலை)

கொழும்பிலிருந்து திருகோண மலை நோக்கிச்சென்று கொண்டி ருந்த பயணிகள் பஸ்வண்டி ஒன்று, ஹபரணை - திருகோணமலை வீதி யில், 133 ஆம் கட்டையில் - விபத்துக குள்ளானதில், மூவர் ஸ்தலத்தி லேயே கொல்லப்பட்டனர். இருபத்தி யேழு பேர் காயமடைந்தனர்.

நேற்று அதிகாலை 5.30 மணிய ளவில் இந்த விபத்து நடைபெற்றது. வேகமாக சென்றுகொண்டிருந்த பஸ்வண்டி, பாதையிலிருந்து விலகி, பாரிய மரம் ஒன்றுடன் மோதியதால் இந்த விபத்து நடைபெற்றது.

விபத்தில், பஸ்ஸில் பிரயாணம் செய்த தாயும், மகனும், மற்றொரு வரும் விபத்து நடைபெற்ற இடத் திலேயே கொல்லப்பட்டனர். இறந்த மூவரினதும் சடலங்கள் அநுராத புரம் வைத்தியசாலையில் ஒப்ப டைக்கப்பட்டுள்ளன.

காயமடைந்தவர்களில் 12 பேர் அநுராதபுரம் அரசினர் வைத்திய சாலையிலும், 11 பேர் கந்தளாய் வைத்தியசாலையிலும், 4 பேர் பொலனறுவை வைத்தியசாலையி லும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (10)

# ரோக்கியோவுக்கு புலிகளை சர்வதேசம் அழைப்பது தவறாம்

## மங்கள சமரவீர கூறுகிறார்

ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடு தொடர்பாக, விடுதலைப் புலி களைப் பொருட்படுத்தக் கூடாது என பொதுஜன ஐக்கிய முன்னணி யின் பிரதான அமைப்பாளர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இக்கருத்தை வெளியிட்டார். விடுதலைப் புலிகள் கலந்துகொள்ளாவிட்டாலும், ரோக் கியோ மாநாடு நடைபெறவேண்டும் என்று அவர் அங்கு வலியுறுத்தி உள்ளார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு, விடுதலைப் புலிக ளுக்கு அழைப்பு விடுத்ததன் மூலம், சர்வதேச சமூகம் தவறு இழைத்து விட்டதாகவும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் அமைப்பாளர் கூறு கின்றார்.

வடக்கு - கிழக்கு மாகாணங் களுக்கு அதிகளவு உதவி வழங் கப்பட்டால், அதனை அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சைக்கிள் விபத்தில் வயோதிபர் பலி

சைக்கிளும் மோட்டார் சைக்கி ளும் எதிரெதிரே மோதிக் கொண்ட தில், துவிச்சக்கரவண்டியில் பய ணம் செய்த வயோதிபர் ஒருவர் மரணமானார்.

நேற்று முன்தினம் உரும்பிராய்ப் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம் பவத்தில், அதேயிடத்தைச் சேர்ந்த காசிப்பிள்ளை மயில்வாகனம் (வயது 74) என்னும் வயோதிபரே படுகாயம டைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்குட் படுத்தப்பட்டவேளை, சிகிச்சை பயன ளிக்காமல் மரணமடைந்தார். (சு)

## மருதனார்மடம்...

லம், கழுத்து தொங்கும் நிலையில் காணப்பட்டது. இவர் வீதியில் விழுந்து கிடப்பதாக ஊரவர்கள் சிலர் கொடுத்த தகவலை அடுத்து, இவ ரது மனைவி சம்பவ இடத்துக்குச் சென்று பார்த்தவேளை, கழுத்து வெட்டப்பட்டு இறந்த நிலையில் ஹேமச்சந்திரா காணப்பட்டார்.

இந்தத் தகவலையடுத்து மானிப் பாய் பொலிஸார், சம்பவிடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற் கொண்டதுடன், சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் இன்று அதிகாலை 1.30 மணிக்கு ஒப்ப டைத்தனர். (சு,87,121)

# காய்ச்சலினால் சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

ஒரு கிழமைக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட இரண்டு வயதுச் சிறு வன் ஒருவர் யாழ். போதனாவைத் திய சாலைக்கு கொண்டுவரும் வழியிலே மரணமடைந்தார்.

மேற்படி சம்பவத்தில், கூளாவடி, ஆனைக்கோட்டை மேற்கைச் சேர்ந்த யூலியன் டிலக்ஷன் (வயது2) என் னும் சிறுவனே மரணமடைந்தவ ராவார். (சு)

## காணமற்போனோர்

# விசாரணைகள் மீண்டும் இம்மாத இறுதியில் ஆரம்பம்

1996, 1997 ஆம் ஆண்டு காலப் பகுதியில், யாழ். குடாநாட்டில் படை யினரால் கைது செய்யப்பட்டு காணா மற்போனோர் தொடர்பான ஐந்தாம் கட்ட விசாரணை - எதிர்வரும் 31 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை- மனிதஉரிமை கள் ஆணைக் குழு அதிகாரிகளால். யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவுள்ளது.

இதன்படி, 31 ஆம் திகதி வலி. மேற்கு பிரதேசசபை அலுவலகத்தி லும், ஏனைய நாட்களில் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திலும், இவ்விசாரணை கள் நடைபெறவுள்ளதென அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ரா, சு)

# உயர்தரப் பெறுபேற்றில் கணிப்பீட்டு புள்ளிகளும்

## 2005 இல் அமுலாகும் என அறிவிப்பு

க.பொ.த. உயர்தரப்பரீட்சை பெறுபேற்றில், கணிப்பீட்டுப் புள்ளி களும் சேர்த்துக் கொள்ளப்படவுள் ளன.

2005 ஆம் ஆண்டு முதற் தட வையாக க.பொ.த. உயர்தரப் பரீட் சைக்குத் தோற்றுபவர்களுக்குப் பரீட சைப் புள்ளிகளுடன் கணிப்பீட்டுப் புள்ளிகளும் சேர்த்துக் கொள்ளப் படவுள்ளதாகத் தெரியவருகிறது

பரீட்சைத் திணைக்களத்தினால் அண்மையில் அனுப்பப்பட்ட இது தொடர்பான சுற்றுநிருபம், சிங்களத் தில் உள்ளபடியால், சரியான தகவல்களைப் பெறமுடியாத நிலை யில் அதிபர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (122)

## நோர்வே அமைச்சர்...

புலிகளை சந்திக்க, நோர்வே அமைச்சர் ஹெல்கிசன் முடிவெடுத் ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசுக்கும், விடுதலைப் புலிக ளுக்குமிடையே நிலவும் முட்டுக்கட் டையை நீக்கும் முக்கியதொரு முயற்சியாக, ஹெல்கிசனின் இன் றைய வருகை நோர்வே தூதரக வட்டாரங்களில் கருதப்படுகின்றது.

வன்னி வரும் ஹெல்கிசன், அர சாங்கத்தின் சில யோசனைகள் அடங்கிய பட்டியல் ஒன்றை எடுத்து வருவதாகவும் தெரியவருகிறது. அவ ரின் வருகை, நேற்றைய தினமே திட்டமிடப்பட்டிருந்தபோதிலும், அரச தரப்புடனான இறுதிநேரப் பேச்சுக் களைக் கருத்திற்கொண்டு, இன் றைய தினத்துக்கு அவரது விஜயம் ஒத்திவைக்கப்பட்டதாகக் கொழும் புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்ஸன், நோர்வே சென்று விட்ட போதிலும் ஹெல்கிசன் தொடர்ந்தும் இலங்கையில் தங்கி யுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, பிரதமர் ரணில் நேற்றுக்காலை 10 மணிக்கு தனிப் பட்ட விஜயமாக இந்தியா புறப்பட டுச் சென்றுள்ளார்.

## தமது முடிவை...

பந்தப்பட்ட தரப்புகளுக்கு சர்வதேச சமூகம் வழங்கும் ஆதரவை வலுப் படுத்தும் நோக்கிலும் அமையுமென ஜப்பான் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், சர்வதேச சமூ கத்தின் ஆதரவுடன் நடக்கவிருக்கும ரோக்கியோ மாநாட்டை, இரு தரப் பினரின் பங்களிப்புடன் குறிப்பிட்ட திகதிகளில் நடத்துவதற்கு ஜப்பான் இன்னமும் நம்பிக்கை கொண்டிருப் பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## நெடுந்தீவிலிருந்து...

அகற்றிவிட்டே கடற்படையினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நீண்டநேரமாகியும் கரை திரும்ப அனுமதிக்காதவேளையில், போராளி கள் தாம் சயனைட் அருந்தப் போவ தாகக் கடற்படையினருக்குத் தெரி வித்திருந்தனர்.

இதனையடுத்தே, போராளிகள் கரைதிரும்ப அனுமதிக்கப்பட்டனர். கரை திரும்பிய இவர்களை, நீண்ட நேரம் காத்திருக்கவிட்டே, யாழ்ப் பாணம் நோக்கிச்செல்ல கடற்படை யினர் அனுமதித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, விடுதலைப் புலிகள் - யாழ்.மாவட்ட யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் முறையிட்டுள்ளனர்.

கடற்படையினர் மேற்கொண்ட இந்த நடவடிக்கை குறித்து, யாழ். மாவட்ட அரசியற்துறை கண்டனம் தெரிவித்துள்ளது. (ச,113)

IIS
A/L 2003
பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான விசேட கணனிக் கற்கைநெறி
Diploma in Information Technology
ஆரம்பமாக இருக்கின்றது.
(மிகக்குறைந்த கட்டணத்தில் 3 மாதகாலப் பயிற்சி நெறி) (சி - 886)
ஆரம்பம்:
பிரிவு 1 : 25.05.2003
பிரிவு 2 : 28.05.2003
பிரிவு 3 : 14.06.2003
காலை 10.00 மணி
INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)
No. 100, Clock Tower Road, Jaffna.
Tel. 21 222 2831
Branches:
IIS, Nelliyaddy, Karaveddy
IIS, Main Road, Chankanai

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.05.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.